வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 24.06.2021 வியாழக்கிழமை | இதழ் : 203 | பக்கங்கள் : 16

# விரைவில் நேரில் பேசுவோம் சம்பந்தனுக்கு ஜனாதிபதி கடிதம்



கொழும்பு, ஜூன் 24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடன் தாம் விரைவில் நேரில் பேசவுள்ளாரென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு நேற்று கடிதம் அனுப்பியுள்ளார்.

ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்த சந்திப்பு பிற்போடப்பட்டமையால், இடையூறுகள் ஏற்பட்டிருந்தால் அதற்கு தான் வருத்தம் தெரிவிப்பதாக ஜனாதிபதி அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் என்று கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ..சுமந்திரன் தெரிவித்தார்.

வெகு விரைவில் சந்திப்புக்கான திகதியை

15

# 17 தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய பரிந்துரை

## பெயர்ப்பட்டியல் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டது

கொழும்பு, ஜூன் 24

நீண்ட காலம் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிச் சந்தேகநபர்கள் 17 பேரை விடுதலை செய்வதற்கான பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது என சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை நேற்று தெரிவித்தார்.

15

# 2,178 பேருக்கு நேற்று தொற்று

கொழும்பு, ஜூன் 24

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2,178 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

15

# கிளிநொச்சி விபத்தில்: குடும்பஸ்தர் மரணம்!

கிளிநொச்சி, ஜூன் 24

கப் ரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். கிளிநொச்சி - கனகபுரம் வீதியில் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில், மோட்டார் சைக்கிளில்

15

# யாழில் 34 பேர் உட்பட வடக்கில் 43 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்ப்பாணத்தில் 34 பேர் உட்பட வடக்கு மாகாணத்தை சேர்ந்த 43 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடங்களில் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோ

15

# வழக்கு தொடராது தமிழ் இளைஞர்களை சிறை வைத்திருப்பது மனித உரிமை மீறல்

## பாராளுமன்றில் சுட்டிக்காட்டினார் தயாசிறி

கொழும்பு, ஜூன் 24

வழக்குகளை தொடராது தமிழ் இளைஞர்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பது, மனித உரிமை மீறல். எனவே, சிறைகளில் உள்ள தமிழ் கைதிகளை விரைவில் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இராஜாங்க அமைச்சர்

15

# கொரோனா தொற்றால் மேலும் 65 பேர் மரணம்!

கொழும்பு, ஜூன் 24

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மேலும் 65 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்த்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

15

# ரிஷாத்தின் உரிமை மீறல் வழக்கு: மூன்றாவது நீதியரசரும் விலகல்!

கொழும்பு, ஜூன் 24

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் அடிப்படை உரிமை மீறல் வழக்கு விசாரணையில் இருந்து மூன்றாவது நீதியரசரும் விலகிக்கொண்டுள்ளார்.

உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி.

15

# அமைச்சர் நாமலின் அறிவிப்பு நம்பிக்கையை தருகின்றது

## அரசியல் கைதிகளின் பெற்றோர் உறவினர்

யாழ்ப்பாணம், ஜூன் 24

நேற்று முன்தினம் பாராளுமன்றில் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் வெளியிட்டுள்ள விசேட அறிவித்தலானது தமக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது என தமிழ் அரசியல் கைதி

15

# குருநகரில் இரு பிரிவுகள் நேற்றிரவு முதல் முடக்கம்!

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்ப்பாணத்தின் புறநகர் பகுதியான குருநகரில் இரு கிராம சேவகர் பிரிவுகளை நேற்றிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சுகாதாரப் பிரிவினர் முடக்கியுள்ளனர். ஜே/69, ஜே/71 ஆகிய இரு கிராம சேவகர் பிரிவுகளே இவ்

15




# மத்திய கிழக்கிலிருந்து வந்தவர்களாலேயே பிரித்தானிய திரிபு இலங்கையில் பரவியது

## திரிபுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை என்கிறார் அமைச்சர் பவித்திரா



கொழும்பு, ஜூன் 24

மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து வருகைதந்துள்ளவர்கள் மூலமே பிரித்தானியாவின் திரிபு இலங்கையில் பரவியுள்ளமைக்கான சாதகத்தன்மைகள் உள்ளனவெனத் தெரிவித்த சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி, திரிபு அடைந்துவரும் கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்த உலகளாவிய உயிரியல் பாதுகாப்பு குமிழி முறையுடன் இணைந்து

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

நோயாளியை நன்கு பரிசோதித்த டாக்டர், "உங்கட உடம்பு ரொம்ப மோசமாய் இருக்கு. நீங்க நல்லா ஓய்வு எடுக்கவேணும். பழங்கள் காய்கறிகளை நன்றாகச் சாப்பிடுங்கள். எக்காரணத்தைக் கொண்டும் ஒரு நாளைக்கு ஒரு கிளாசுக்கு மேலே மது அருந்தக் கூடாது", என்றார்.

இரண்டு மாதம் கழித்து டாக்டரிடம் வந்தார் அந்த நோயாளி.

"இப்பொழுது எப்படி இருக்கிறது?", என்று கேட்டார் டாக்டர்.

"நன்றாகத் தேறி விட்டேன் டாக்டர். ஆனால், நீங்க சொன்னதில ஒன்றைச் செய்யிறதுதான் எனக்கு ரொம்ப கஷ்டமாக இருக்குது", என்றார் நோயாளி.

"என்ன அது?", என்று கேட்டார் டாக்டர்.

"நாள்தோறும் ஒரு கிளாஸ் மது குடிக்கச் சொன்னீர்களே. என்னால் முடியேல்ல. குமட்டிக்கிட்டு வருது. எப்படியோ துன்பப்பட்டுக் குடிக்கிறேன்".

அண்மையில், தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணியின் பேச்சாளரும் கொள்கை பரப்புச் செயலாளருமான அருந்தவபாலன் முக்கிய செய்தி ஒன்றை அறிவித்திருந்தார்.

தமது கூட்டணி எக்காரணத்தைக் கொண்டும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தேர்தல் கூட்டை ஏற்படுத்தாது.

ஏன் இந்த அறிவிப்பை செய்தார் என்பது அவருக்கு மாத்திரமே தெரிந்த சங்கதி. கூட்டமைப்போ அல்லது அதன் தலைவர்களோ, அப்படியொரு கூட்டுக்குறித்து பேசியதாகவோ, அல்லது அதற்கான விருப்பத்தைத் தெரிவித்ததாகவோ எங்கும் செய்தி வந்ததாகத் தெரியவில்லை.

சில காலத்திற்கு முன்னர் தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்து அடிக்கடி சில சந்திப்புக்களை நடத்தியிருந்தன.

அந்தக் காலத்தில் ஊடகவியலாளர்கள் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை கேள்வி கேட்டபோது, "கூட்டமைப்பிற்கு வெளியே இருக்கின்ற அத்தனை பேரும் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியவர்கள்தானே, அவர்கள் எப்போது வேண்டுமானாலும் கூட்டமைப்பிற்குள் வரலாம்", என்று தொவித்திருந்தார்.

ஆனால், எதிர்காலத்தில் நடக்கும் தேர்தல் ஒன்றிற்காக கூட்டணி அமைக்கவேண்டும் என்ற கோரிக்கையை கூட்டமைப்பிலிருந்து யாரும் விடுத்ததாகத் தெரியவில்லை. இந்நிலையில் அருந்தவபாலன் ஏன் அப்படிச் சொன்னார் என்பது தெரியவில்லை.

அவரின் அந்த அறிவிப்பு இரண்டு விசயங்களை சொல்கின்றது.

ஒன்று, யாரோ தேர்தல் கூட்டுக்கு கேட்டிருக்கவேண்டும்.

அல்லது அவர், தேர்தல் கூட்டு இல்லாமல் நிரந்தர கூட்டுக்கு விரும்பவேண்டும்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்பது நாமறிந்த வரையில் நான்கு கட்சிகளின் கூட்டு. சுரேஷ் பிறேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ்., விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி, சிவாஜிலிங்கம் - சிறிகாந்தாவின் தமிழ்த் தேசியக் கட்சி, அனந்தி சசிதரனின் ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் ஆகிய கட்சிகளின் கூட்டணி. இவற்றில் ஈ.பி.ஆர்.எல்.எவ். மாத்திரமே பதிவு செய்யப்பட்ட கட்சி என்பதால், அந்தக் கட்சியின் பெயரை தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்று மாற்றிவிட்டு தேர்தலை சந்தித்தனர்.

இந்தக் கூட்டணி தேர்தலுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கூட்டணி அமைக்காது என்றால், அதன் அர்த்தம் இந்த நான்கு கட்சிகளும் கொள்கையிலான கூட்டணி என்பதும் சொல்லாமல் சொல்லப்படுகின்ற சங்கதி.

நல்லது, கூட்டமைப்பில் இருந்துகொண்டே, இரண்டாயிரத்து பதினைந்து ஜனாதிபதி தேர்தலை தமிழ் மக்கள் பகிஷ்கரிக்கவேண்டும் என்று கோரிக்கை வைத்தவர் அனந்தி. அவரின் கொள்கை என்ன என்பது இரகசியமானதல்ல. எனவே, முதலில் கூட்டணியில் உள்ளவர்கள் தத்தமது கொள்கையை பகிரங்கப்படுத்தினால்தானே கொள்கை அடிப்படையிலான கூட்டணி பற்றி கூட்டமைப்பும் சிந்திக்கலாம். அருந்தவபாலனே அதனையும் செய்வதுதான் அரசியல் நாகரிகம்!

- ஊர்க்குருவி

# விதிமுறைகளை மீறி அல்வாயில் வேள்வி!

## ஒருவர் கைது; 30 பேர் தனிமையில்

வடமராட்சி, ஜூன் 24

வடமராட்சி - அல்வாயில் கோயில் ஒன்றில் முகக்கவசம் இன்றியும், சமூக இடைவெளி பேணாமலும் 500இற்கும் மேற்பட்டவர்கள்கூடி வேள்வி, பொங்கல் நடத்தியுள்ளனர். இதையடுத்து அந்தக் கோயிலின் நிர்வாகி கைது செய்யப்பட்டார். அத்துடன் 30 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்.

அல்வாய் வடக்கு விறுமார் கோயிலிலேயே இவ்வாறு சுகாதார விதிகளை கடைப்பிடிக்காமல் மக்கள் கூடியிருந்தனர்.

இவ்வாறு மக்கள் கூடுவது குறித்தோ அல்லது வேள்வி நடத்தப்படுவது குறித்தோ அப்பகுதி சுகாதாரப் பிரிவினரிடம் முன் அனுமதி பெறப்படவில்லை. இந்த நிலையில், இதுபற்றி அறிந்த சுகாதாரப் பிரிவினர் பருத்தித்துறை பொலிஸாருடன் இணைந்து வேள்வி நடந்த இடத்துக்கு சென்றனர்.

அனுமதியின்றி வேள்வி நடத்தியமை, சட்டத்துக்கு புறம்பாக மக்களை ஒன்று கூட்டியமை போன்ற குற்றங்களுக்காக கோயில் நிர்வாகியைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

அத்துடன், சுகாதார விதிகளை பின்பற்றாத 30 பேரை கட்டாய சுயதனிமைப்படுத்தலுக்கு சுகாதாரப் பிரிவினர் உட்படுத்தினர்.

இதேவேளை, சம்பவ இடத்தில் சுகாதாரப் பிரிவினர், பொலிஸாரின் கடமைகளுக்கு அச்சுறுத்தல் விடுத்த இளைஞர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்ய முயன்றனர். ஆனால், அவர் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார். காணொலி, ஒளிப்பட ஆதாரங்களை கொண்டு அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-2)

# இந்தியாவுக்கு கடத்தப்படவிருந்த பெருமளவான சங்குகள் சிக்கின

கொழும்பு, ஜூன் 24



சட்டவிரோதமான முறை யில் இந்தியாவுக்குக் கடத்தப் படவிருந்த 33 ஆயிரத்து 680 சங்குகள் இலங்கை சுங்கத்திணைக்களத்தின் பல்லுயிர், கலாசார மற்றும் தேசிய பாரம்பரிய பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கடந்த 15ஆம் திகதி புத் தளம் பகுதியில் வைத்து ஒரு தனியார் நிறுவனத்தினால் சங்குகளின் பங்குகளை கொள் கலன்களில் அடைத்து இந்தியா வுக்கு ஏற்றுமதி செய்யப் போவதாக புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதனைய டுத்து இரண்டு நாட்களாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து ஏற்றுமதி செய்வ தற்குத் தடை செய்யப்பட்ட சங்குகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கடற்றொழில் மற்றும் நீரியல் வழங்கல் திணைக்களத்தால் ஏற்றுமதி உரிமத்தின் அதிகாரத்தின் கீழ் தவிர சங்கு ஓடுகளை ஏற்றுமதி செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், 70 மில்லி மீற்றருக்கும் குறைவான விட்டம் கொண்ட சங்கு ஓடுகளை வைத் திருத்தல், வாங்குவது, காட்சிப்படுத்தல், விற்பனை செய்தல், போக்குவரத்து அல்லது ஏற்றுமதி செய்வது உள்ளிட்ட விடயங்கள் இந்தச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளன.

எனவே, சுங்கப் பிரவினரால் பறிமுதல் செய்யப்பட்ட சங்குகளில் 21 ஆயிரத்து 480 பங்கு கள் 70 மில்லி மீற்றருக்கும் குறைவான விட்டம் கொண்டவை என்று சோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சுங்கத் திணைக்களத்தின் பல்லுயிர், கலாசார மற்றும் தேசிய பாரம் பரிய பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# கொரோனாவிலிருந்து மட்டுமல்ல; பட்டினி கிடந்தும் சாகும் நிலை!

## வடிவேல் சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 24.

நாட்டு மக்கள் கொரோனாவிலிருந்து மட்டுமல்ல பட்டினியில் கிடந்து சாகும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது தொடர்ந்து கருத்துரைத்த அவர்,

நாட்டில் தற்போது நிலவுகின்ற நெருக்கடிமிக்க சூழலில் நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளனர். விசேடமாக மலையக மக்கள் திட்டமிட்டு அரசாலும் பெருந்தோட்டக் கம்பனிகளாலும் முழுமையாக ஓரங்கட்டப்பட்டு வருகின்றனர்.

ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வுக்குப் பின்னர் பெருந்தோட்டக் கம்பனிகள் தொழிலாளர்களின் வேலைநாட்களைக் குறைத்து வேலைச் சுமைகளை அதிகரித்துள்ளதால் இன்று பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களாக பெருந்தோட்ட மக்களே உள்ளனர்.

நாட்டில் தற்போது அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. எரிபொருள் விலை அதிகரித்துள்ளது.

இதனால் பெருந்தோட்டப் பகுதிகளில் மிகவும் பின்தள்ளப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்கள் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த அரசு பொறுப்புவாய்ந்த அரசு என்றால் இந்த மக்களுக்கு நிவாரணத்தை வழங்கியிருக்கலாம்.

இந்த நாடு தற்போது எங்கே சென்றுக்கொண்டிருக்கின்றது? மலையகத்தில் கொழுந்து பறிப்பதற்கும் சீனாவிலிருந்து பெண்களை அழைத்து வரப் போகின்றனரா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது" - என்றார்.

# மகாஜன கல்லூரி நிறுவுநர் நினைவுதினம்!

யாழ்ப்பாணம், ஜூன் 24

தெல்லிப்பழை மகாஜன கல்லூரியின் நிறுவுநர் நினைவுதினம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ம. மணிசேகரன் தலைமையில் மெய்நிகர் வழியில் இடம்பெறும் இந்த நிகழ்வில் நினைவுப் பேருரையை கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் கு. வேல்சிவானந்தன் ஆற்றவுள்ளார்.

இந்த நிகழ்வை சூம் செயலியில் 82314731396 என்ற ஐடி மூலம் அனைவரும் பார்வையிட முடியும் என்று பாடசாலை சமூகம் அறிவித்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
24.06.2021 வியாழக்கிழமை
பிலவ வருடம், ஆனி 10

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# ரணிலின் நகர்வுகள் வெற்றிபெறுமா?

மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவின் குரல் பாராளுமன்றத்தில் ஒலித்திருக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்த ஒரேயொரு தேசிய பட்டியல் ஆசனத்தின் மூலம் ரணில் மீளவும் அரசியல் அரங்கிற்குள் பிரவேசித்திருக்கின்றார். இதன்மூலம் ஒருவருட காலமாக தான் மேற்கொண்டுவந்த அரசியல் அஞ்ஞாத வாசத்திற்கு முற்றுபுள்ளி வைத்திருக்கின்றார். இதனை ரணில் ஆரம்பத்திலேயே செய்திருக்கலாம், ஆனால், அவர் உடனடியாக பாராளுமன்றம் செல்லவில்லை. கிட்டத்தட்ட அரசியலிலிருந்து ஒதுங்கிவிட்டவர்போன்றே நடந்துகொண்டார். ஆனால், ‘மீண்டும் நான்’ என்னும் சுலோகத்துடன் பாராளுமன்றத்திற்குள் பிரவேசித்திருக்கின்றார்.

தனது முதலாவது உரையிலேயே நாட்டின் பொருளாதாரத நிலைமை தொடர்பில் எச்சரித்திருக்கும் ரணில், சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து பணியாற்றுவது தொடர்பில் அரசாங்கம் திடமான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் – இல்லாவிட்டால், தங்களிடமுள்ள மாற்று திட்டத்தை முன்வைக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கின்றார். சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து பயணிப்பது என்பது, அடிப்படையில் மேற்குலகத்துடன் இணைந்து பயணிப்பதாகும். குறிப்பாக, சீனாவிடம் செல்வதை விடுத்து, நாணய நிதியத்தின் பொருளாதார ஆலோசனைகளுக்கு அமைவாக செயல்படுவதாகும். அதே வேளை, நாட்டின் நிர்வாகம் இராணுவ மயப்பட்டுவருவதாகவும் ரணில் குற்றம் சாட்டியிருக்கின்றார். ரணில் எதிரணியில் பலவீனமாக இருந்தாலும்கூட, ரணிலின் குரல் எதிரணியில் தனித்து தெரியும். ரணிலின் குரலோடு ஒப்பிட்டால் சஜித் பிரேமதாஸவின் குரல் பலமான ஒன்றாக இருக்கப்போவதில்லை. சஜித் தரப்பினர், ரணில் தொடர்பில் விமர்சனங்களை முன்வைத்து வருவதற்கு பின்னால் ரணில் தொடர்பான அச்சமே பிரதான காரணமாகும்.

ஆனால், ரணிலால் மீளவும் தனது தலைமையின்கீழ் ஒரு பலமான அணியை கட்டியெழுப்ப முடியுமா? ரணில் விக்கிரமசிங்க அரசியலில் மிகவும் சாமர்த்தியசாலி என்று பெயர் எடுத்த ஒருவர். சுமந்திரனின் வார்தையில் கூறுவதனால், அவர் மிகவும் புத்திசாலித்தனமான ஒருவர். ஆனால், அவரின் தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி வந்து சேர்ந்திருக்கும் இடம், அவரின் புத்திசாலித்தனம் தொடர்பில் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. ஆனாலும், அரசாங்கம் தள்ளாடிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தை கணித்தே, ரணில் மீளவும் தனித்து களம் இறங்கியிருக்கின்றார்.

ரணிலின் திறமை தொடர்பில் என்னதான் கூறினாலும், அரசியலில் அதிர்ஷ்டம் எப்போதுமே ரணிலுக்கு கைகொடுத்ததாக தெரியவில்லை. ‘சாண் ஏற முழம் சறுக்கிய’ கதையாக அவர் மேற்கொள்ளும் நகர்வுகள் இறுதியில் அவருக்கு பிரச்னையாகிவிடுகின்றன.

ரணில் ஜனாதிபதியாக வருவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் சாதகமாக இருந்தது. பழம் நழுவி பாலில் விழப்போகும் நிலையில், விடுதலைப் புலிகளின் தலைமையினது தேர்தல் பகிஷ்கரிப்பு முடிவால், ரணிலின் ஆசை நிராசையாகிப்போனது. மீண்டும் மைத்திரிபால சிறிசேன அணியுடனான கூட்டால், பலமான பிரதமாராகும் வாய்ப்பு ரணிலுக்கு கிடைத்தது. ஆனால், ஆட்சியை தொடர்ந்தும் தக்கவைக்க முடியவில்லை. மீண்டும் ஒரு தேர்தலை எதிர்கொள்ளும் நிலையில், சஜித் பிரேமதாஸவின் பிளவால் ஐக்கிய தேசிய கட்சி மோசமான பின்னடைவை சந்தித்தது. இறுதியில், ரணில் மட்டும் பாராளுமன்றத்தில் தனித்து நிற்கும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

ஆனால், சற்றும் மனம் தளராமால், மீண்டும் ஓர் ஆட்டத்தை ஆட முடியுமென்று ரணில் நம்புகின்றார். அரசியலில் நிரந்தர அறிவாளிகளும் கிடையாது. அதே வேளை, நிரந்தர முட்டாள்களும் கிடையாது. ரணில் நம்புவதுபோன்று, அவருக்கான வாய்ப்புக்கள் கிடைக்கலாம் – கிடைக்காமலும் போகலாம். இலங்கைத் தீவின் அரசியல் வரலாற்றில் எதிர்வு கூறல்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பிழைத்து போயிருக்கின்றன.

# நாமலின் அர்த்தமுள்ள நல்லிணக்க நகர்வு

- அலசுவது **இராஜதந்திரி** -



அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இதுவரை எந்தவொரு தென்னிலங்கை அரசியல்வாதியும் தெரிவிக்க முன்வந்திராத, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் குறிப்பிட்டுள்ளார். அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவதோடு, பயங்கரவாத தடைச்சட்டமும் நீக்கப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

நாமல் ராஜபக்ஷவின் கோரிக்கையை முன்னாள் இராணுவத்தளபதியும், தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும் வரவேற்றுள்ளார். இதுதவிர, பாராளுமன்றத்தின் சகல கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்களும் நாமல் ராஜபக்ஷவின் கோரிக்கையை வரவேற்றுள்ளனர்.

நாமல் ராஜபக்ஷ மற்றும் சரத் பொன்சேகா ஆகியோர் கடந்த காலங்களில் அரசியல் பழிவாங்கல்கள் காரணமாக சிறைவைக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. முன்னர் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் அன்றைய ஜனாதிபதியும் இன்றைய பிரதம மந்திரியுமான மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதித் தேர்தலில் எதிர்த்து போட்டியிட்டமை காரணமாக அரசியல் பழிவாங்கலின் அடிப்படையில் சரத் பொன்சேகா இரு வருடங்கள்வரை சிறைவைக்கப்பட்டிருந்தார்.

**சிறைவாச அனுபவங்கள்**

இதன்பின்னர், ‘நல்லாட்சி’ என்ற கடந்த ஆட்சிக்காலத்தில் நாமல் ராஜபக்ஷ குறுகிய காலம் சிறைவைக்கப்பட்டிருந்தார். எனவே, இவர்களிருவரும் சிறைவாச அனுபவங்களை கொண்டுள்ளனர். அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, தாம் சிறை வைக்கப்பட்டிருந்த காலத்தில் தம்மோடு சில தமிழ் அரசியல் கைதிகளும் சிறைகளில் இருந்தனர் எனவும், இதனால் அவர்களின் மனக்கிடக்கையை தம்மால் நன்கு அறிந்துகொள்ள முடிந்ததாகவும் முன்பொரு தடவை தெரிவித்திருந்தார்.

சிறையில் தம்மோடு பழகிய கிளிநொச்சியை சேர்ந்த வறுமை நிலையிலிருக்கும் தமிழ் கைதியொருவரிடம், தாம் சிறையிலிருந்து வெளியேறியதும் புதிய வீடொன்றை அவரது குடும்பத்தினருக்கு கட்டிக்கொடுப்பதாகவும் நாமல் ராஜபக்ஷ கூறியிருந்தார். தாம் கூறியதன் பிரகாரம் அக் கைதியின் குடும்பத்தினருக்கு சிறையிலிருந்து வெளியே வந்ததும் கிளிநொச்சி சென்று, புதிய வீடொன்றையும் நாமல் ராஜபக்ஷ கட்டிக்கொடுத்திருந்தார். நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தமிழ் கைதிகளின் விடுதலை தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டபோது நாமல் ராஜபக்ஷ சிறையிலுள்ள தமிழ் கைதிகளின் தண்டனைக் காலம் குறித்த விபரங்களை வெளிப்படுத்தியிருந்தார்.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வழங்கிய விளக்கத்தில், நீண்டகாலமாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு வழக்கு விசாரணைகளின் பின்னர் தண்டனை பெற்றுவரும் நபர்கள் 35 பேர் உள்ளனர். ஆனால், இவர்களில் அதிகமானோர் தமக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனைக் காலத்தைவிடவும் அதிகளவு காலம் சிறைகளில் இருக்கின்றனர். தற்போது 38 வழக்குகள் விசாரிக்கப்பட்டு வருகின்றன என கூறிய நாமல் ராஜபக்ஷ, இவ்வழக்குகள் 20 ஆண்டுகளுக் கும் மேலாக விசாரிக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இவை தவிர 13 பேர் எவ்வித வழக்கும் தொடுக்கப்படாது தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள அவர், குற்றப்பத்திரிகை தொடுக்காது 116 பேர் சிறையில் இருக்கின்றரெனவும் தெரிவித்திருந்தார்.


**வரவேற்கப்படவேண்டியது**

எனவே, எவ்வளவுதூரம் நீதி விசாரணைகளின்றி தமிழ் கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்ற விபரத்தை நாமல் ராஜபக்ஷ வெளியிட்டிருப்பதை பார்க்கும்போது நீதி, நியாயங்கள் என்ற விடயங்கள் மலையேறிப் போயுள்ளமையையே அவதானிக்க முடிகின்றது.

இருந்தபோதிலும், பாராளுமன்றத்தில் முதல்தடவையாக மிக விரிவான முறையில் தமிழ் அரசியல் கைதிகளின் விடயங்கள் அரசதரப்பு அமைச்சர் ஒருவரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதோடு, அக்கைதிகளின் விடுதலை பற்றியும் வலியுறுத்தப்பட்டிருப்பது வரவேற்கப்படவேண்டியதாகவே இருக்கின்றது. அதேசமயம், சகல அரசியல் கட்சிகளும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, மற்றும் பயங்கரவாத தடைச்சட்ட நீக்கத்தின் அவசியத்தை வரவேற்றிருப்பதுகூட பாராட்டப்படவேண்டியதாகவே இருக்கின்றது.

எனவே, தென்னிலங்கையில் முதல் தடவையாக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி, சகல அரசியல் கட்சிகளும் ஏகோபித்த முறையில் தமது ஆதரவை வெளியிட்டுள்ள நிலையில் பேச்சளவோடு மட்டும் நிற்காது, விடுதலை குறித்த நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படவேண்டியதே அடுத்த கட்ட நடவடிக்கையாக இருக்கவேண்டியதாகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜூன் - 24 வியாழக்கிழமை
பிலவ வருடம் - ஆனி 10
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 1.30 - 3.00
திதி : பௌர்ணமி




**மேடம்**
எதிர்பாலின நட்புகளுடன் நெருக்கம் கூடும். பயம் நீங்கும். பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள். எதிலும் கவனம் தேவை. மதிப்புக் குறையும் படியான செயல்களில் ஈடுபட வேண்டாம்.

**இடபம்**
பணி பற்றிய செயலிலும், பேச்சிலும் கவனமாக இருங்கள். சுபநிகழ்ச்சிகளில் நேரலை சந்திப்பில் கலந்து கொள்ள நேரலாம். இத்தனை காலம் குறைந்து இருந்த மரியாதை கூடும்.

**மிதுனம்**
சக பணியாளர்களிடம் இருந்த பிரச்னை ஒன்று தீரும். நெருங்கிய நண்பர்களின் உதவி உங்களுக்குத் தேவைப்படும். நிதி நிலையில் முன்பைவிட சிறு முன்னேற்றம் தெரியும்.

**கடகம்**
அக்கம்பக்கத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. நெருங்கிய உறவினருக்கு கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பணி பற்றிய முயற்சியில் சாதகமான பலன் கிடைக்கும்.

**சிம்மம்**
திட்டமிட்ட விஷயத்தில் கூடுதல் முயற்சியை மேற்கொள்வீர்கள். புரிதல் ஏற்படும். வாக்குவாதங்களை விடுத்து நிம்மதி காண்பீர்கள். செலவு குறைந்து நிம்மதி உண்டாகும். பயங்கள் தீரும்.

**கன்னி**
பூர்வீக சொத்துக்கள் மூலம் வரும் வருமானம் தாமதப்படும். சோர்வு உண்டாகலாம். முயற்சிகளில் சாதகமான நிலை இருக்கும். திருமணம் பற்றிய முயற்சிகளில் முன்னேற்றம் இருக்கும்.

**துலாம்**
பாவ எண்ணம் மனதில் தோன்றாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பூச்சிக்கடி போன்றவை பற்றிய பயம் வேண்டாம். நட்பு வட்டம் விரியும். மூத்தோரின் உடல் நல பிரச்னை சிறிய வைத்தியத்திலேயே சரியாகும்.

**விருட்சிகம்**
மேலதிகாரியிடம் பேசும்போது உரிய பயம் இருத்தல் நல்லது. தீய செயல் செய்யத் தூண்டும் நண்பர்களுடன் சேர வேண்டாம். புத்திக்கூர்மையுடன் செயல்களை ஆராய்ந்து சரி செய்வீர்கள்.

**தனுசு**
தேவையற்ற வாக்குவாதம் வரலாம். மதியத்துக்குப் பிறகு நிம்மதி மீளும். விரும்பிய துறையில் வெல்வதற்கு அல்லாட வேண்டியிருக்கும். பயம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். வேலைப்பளு கூடும்.

**மகரம்**
நீங்கள் எடுக்கும் தீர்மானங்கள் தாமதமாகவே நிறைவேறும். மனதிற்கு மகிழ்ச்சி தரும் செலவுகளாகவே செய்வீர்கள். தேவையான பண உதவி இன்று கிடைக்க பெறுவீர்கள்.

**கும்பம்**
சிறுசிறு கவலைகள் தோன்றும். சேமிப்பில் ஆர்வம் கூடும். பிரச்னைகளை சமாளித்து முயன்று வெற்றி பெறுவீர்கள். குடும்பத்தில் உள்ள குழப்பத்தை தீர்க்க நடவடிக்கை எடுப்பீர்கள்.

**மீனம்**
நேர்மையானவர்களுக்குச் சாதகமான காலகட்டமாக உள்ளது. குடும்பத்தினருடன் விட்டுக்கொடுத்து சண்டையைத் தவிர்ப்பீர்கள். நிதி விஷயங்களில் தாமதம் ஏற்படுவதாக ஒரு சலிப்புத் தோன்றும்.

# இலங்கை தமிழ் அகதிகளின் வாரிசுகளுக்கு மருத்துவ கல்வி இட ஒதுக்கீடு வேண்டும்!

## அவர்களுக்கு வாய்ப்பை மறுப்பது அநியாயம்; ராமதாஸ்

சென்னை, ஜூன் 24

தமிழ்நாட்டில் மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கையில் ஈழத்தமிழ் அகதிகளின் வாரிசுகளுக்கு குறிப்பிட்ட அளவு இடங்களைச் சிறப்பு ஒதுக்கீடாக ஒதுக்க வேண்டும், இதற்கான சட்டபூர்வ நடவடிக்கைகளை மேற்கொண்டு ஈழத்தமிழ் அகதிகளின் வாரிசுகளின் மருத்துவக் கல்விக் கனவை தமிழக அரசு உடனடியாக நனவாக்க வேண்டும் என பா.ம.க. நிறுவுநர் எஸ்.ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து ராமதாஸ் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

"தமிழ்நாட்டில் ஈழத் தமிழர்களுக்குக் குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட ஏராளமான கோரிக்கைகள் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கும் நிலையில், அவர்களுக்கு மருத்துவக் கல்லூரிகளின் மாணவர் சேர்க்கை உரிமை கூட கடந்த 20 ஆண்டுகளாக மறுக்கப்பட்டு வருகிறது. ஈழத் தமிழர்களின் தந்தை நாடு என்று கூறிக்கொள்ளும் தமிழ்நாடு இந்த வாய்ப்பைக் கூட வழங்க மறுப்பது அநீதியாகும்.



கலை மற்றும் அறிவியல், பொறியியல் உள்ளிட்ட படிப்புகள் அவர்களுக்குச் சாத்தியமாகி விட்டாலும், மருத்துவப் படிப்பு என்பது எட்டாக்கனியாகவே இருந்து வருகிறது. அதற்குக் காரணம் ஈழத் தமிழர்களுக்கு மருத்துவப் படிப்பில் இடம் ஒதுக்கப்படாததுதான். கடந்த 20 ஆண்டுகளில் மருத்துவப் படிப்பில் சேருவதற்கு தகுதியான மதிப்பெண்களைப் பெற்றும் மருத்துவக் கல்லூரிகளில் சேர முடியாமல் ஏமாற்ற மடைந்த மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை ஏராளம்.

அவர்கள் செய்த ஒரே பாவம் ஈழத்தமிழ் அகதிகளுக்கு வாரிசுகளாகப் பிறந்ததுதான். ஈழத் தமிழ் அகதிகளின் குழந்தைகளுக்கு மருத்துவம் படிப்பதற்கான வாய்ப்புகள் இங்கிலாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள், கனடா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் தாராளமாக வழங்கப்படுகின்றன. ஆனால், ஈழத் தமிழர்களின் தந்தை நாடான தமிழ்நாட்டில் அந்த வாய்ப்பு மறுக்கப்படுவது அநியாயமாகும்.

எனவே, தமிழ்நாட்டில் மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கையில் ஈழத்தமிழ் அகதிகளின் வாரிசுகளுக்குக் குறிப்பிட்ட அளவு இடங்களைச் சிறப்பு ஒதுக்கீடாக ஒதுக்க வேண்டும். எத்தனை இடங்கள் என்பதை தமிழ்நாட்டில் உள்ள ஈழத்தமிழ் அகதி மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப முடிவு செய்யலாம். இதற்கான சட்டபூர்வ நடவடிக்கைகளை மேற்கொண்டு ஈழத் தமிழ் அகதிகளின் வாரிசுகளின் மருத்துவக் கல்விக் கனவைத் தமிழக அரசு உடனடியாக நனவாக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்" என ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

# ஒன்றிய அரசு என அழைப்பது ஏன்? முதலமைச்சர் ஸ்டாலின் விளக்கம்

சென்னை, ஜூன் 24

ஒன்றியம் என்ற வார்த்தையைக் கேட்டு யாரும் மிரளத் தேவையில்லை என்று கூறிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், "அதில் கூட்டாட்சித் தத்துவம் உள்ளது. அதனால் பயன்படுத்தினோம், பயன்படுத்துவோம், பயன்படுத்திக் கொண்டே இருப்போம்" என்று கூறினார்.



தமிழக சட்டப்பேரவையில் பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் நயினார் நாகேந்திரன் நேற்று பேசுகையில், மத்திய அரசை, ஒன்றிய அரசு என கூறுவது ஏன் என முதலமைச்சர் விளக்கமளிக்க வேண்டும் என கோரினார்.

இதற்கு பதிலளித்த முதலமைச்சர் மு.க ஸ்டாலின், "ஒன்றிய அரசு என கூறுவதை குற்றமாக கருத வேண்டாம், நமது அரசியல் சாசன சட்டத்தில் கூறப்பட்டதைதான் நாங்கள் சொல்கிறோம். சட்டத்தில் இல்லாததை நாங்கள் பயன்படுத்தவில்லை.

அண்ணா, கலைஞர் கூறாததை நாங்கள் சொல்வதாக விமர்சிக்கின்றனர். 1963ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் பேரறிஞர் அண்ணா இதுபற்றி பேசியிருக்கிறார். ஒன்றியம் என்ற வார்த்தையை பார்த்து யாரும் மிரள தேவையில்லை. இதை நாங்கள் தொடர்ந்து பயன்படுத்துவோம். இது கூட்டாட்சி தத்துவத்தை பிரதிபலிப்பது" என்று கூறினார்.

அப்போது, இந்தியாவில் இருந்து பிரிந்ததுதான் மாநிலங்கள் என நயினார் நாகேந்திரன் கூறியதற்கு பதிலளித்த உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி, இந்தியாவில் இருந்து மாநிலங்கள் பிரியவில்லை. எல்லோரும் ஒன்றிணைந்து உருவாக்கியதுதான் இந்தியா என விளக்கமளித்தார்.

# உள்ளூராட்சி தேர்தல்களை நடத்த கூடுதல் கால அவகாசம் தேவை

## தமிழக அரசு சட்டப்பேரவையில் விளக்கம்

சென்னை, ஜூன் 24

உள்ளாட்சி தேர்தல் நடத்துவதற்காக பணிகளை முடிப்பதற்கு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்திற்கு கூடுதல் கால அவகாசம் தேவைப்படுவதாக தமிழக அரசு நேற்றுத் தெரிவித்துள்ளது.

இதனால் தமிழகத்தில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் தனி அலுவலர் பதவிக்காலம் மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தனி அலுவலர் பதவிக் காலத்தை டிசம்பர் 31 வரை நீட்டிக்கும் மசோதா சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அமைச்சர் கே.என்.நேரு, கே.ஆர். பெரியகருப்பன் சட்ட மசோதாக்களை பேரவையில் தாக்கல் செய்தனர்.

கூடுதல் அவகாசம் தேவைப்படுவதால் தனி அலுவலர் பதவிக்காலம் நீட்டிக்கப்படுவதாக மசோதாவில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. புதிதாக உருவான 9 மாவட்டங்களின் ஊராட்சிகளில் தனி அலுவலர் பதவிக்காலமும் மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. செப்டம்பர் 15 க்கு முன்னர் உள்ளாட்சி தேர்தலை நடத்த உச்சநீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில் தமிழக அரசு சட்டப்பேரவையில் விளக்கம் அளித்துள்ளது.

ஈழநாடு



## கப்பல் தீ பரவலால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் 4.8 கோடி ரூபாய் நிதியுதவி

கொழும்பு, ஜூன் 24

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீ பரவலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் 4.8 கோடி ரூபாய் நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது.

இந்த உதவித் தொகையின் ஊடாக 15 ஆயிரம் பேர் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தக் கப்பலில் தீ ஏற்பட்டதையடுத்து வெகுவாக பாதிக்கப்பட்டுள்ள கொழும்பு, காலி, கம்பஹா, களுத்துறை, பாணந்துறை மற்றும் மாத்தறை பகுதி மீனவர்கள் இந்த உதவியின் கீழ் பயனடைவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிராக சபைக்குள் போராட்டம்!

**கொழும்பு, ஜூன் 24**

**எரிபொருள் விலை உயர்வை எதிர்த்து ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று காலை பாராளுமன்றத்தில் போராட்டம் நடத்தினர்.**

எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவிடம் நேற்று முன்தினம் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு தங்களுக்கு சரியான பதில் கிடைக்கவில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார குற்றம் சாட்டினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபைக்குள் பதாகைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அமைச்சர் கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை நேற்று சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## 6 லட்சம் ரூபாய் பெறுமதியான உபகரணங்கள் கிருஸ்ணபுரம் வைத்தியசாலைக்கு கையளிப்பு

கிளிநொச்சி, ஜூன் 24

கிளிநொச்சி கிருஸ்ணபுரம் தொற்று நோயியல் வைத்தியசாலையின் பயன்பாட்டுக்காக 'வரன்டீனா' அபிவிருத்தி சேவைகள் நிறுவனத்தினால் 6 இலட்சம் ரூபாய் பெறுமதியான வைத்திய உபகரணங்கள் நேற்று கையளிக்கப்பட்டுள்ளன.

இதில் மருத்துவ உபகரணங்கள், நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் உள்ளிட்டவை அடங்கும்.

இந்த நிறுவனத்தின் பிரதிநிதிகளால் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரிடம் இந்த உபகரணங்கள் கையளிக்கப்பட்டுள்ள நிலையில், அவை பயன்பாட்டுக்காக குறித்த வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## பாடசாலை மாணவருக்கு இலகு தவணை கொடுப்பனவு அடிப்படையில் கைபேசிகள்

கொழும்பு, ஜூன் 24

பின்தங்கிய மற்றும் குறைந்த வருமானங்களை பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் இணையவழியாக கல்வியைத் தொடர, இலகு தவணை கொடுப்பனவு அடிப்படையில் கைபேசிகளை கொள்வனவு செய்யக்கூடிய முறைமையொன்றை விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளதாக கல்வியமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஒத்திவைப்புவேளை விவாதத்தின்போது, அவர் இதனை தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி கவிரத்னவினால் முன்வைக்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே கல்வியமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

## இலங்கையில் சீன இராணுவத்தினரா? வெளியாகியுள்ள செய்தியால் பரபரப்பு!

கொழும்பு, ஜூன் 24



சீன -இலங்கை கூட்டு நிறுவனமொன்றிடம் கையளிக்கப் பட்டுள்ள திஸ்ஸமகாராமய வாவி துப்புரவு திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் சீனாவின் மக்கள் விடுதலை இராணுவத்தினர் அணிந்திருப்பதைப் போன்ற சீருடைகளை அணிந்த நிலையில் சிலர் பங்கேற்றமை சர்ச்சைக்குரிய பேசுபொருளாக மாறியுள்ளது.

இது குறித்து வெளியாகியுள்ள வீடியோ, புகைப்பட ஆதாரங்களுடனான செய்திகள் குறித்து கேள்விகள் எழுந்துள்ளன.

அமெரிக்க இராணுவம் இலங்கையில் கால்தடம் பதிப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திய மிலேனியம் சவால் உடன்படிக்கை கடும் எதிர்ப்பு காரணமாக இரத்து செய்யப்பட்டது.

எனினும், தென்பகுதியில் இத்தகைய சீருடையை அணிந்த வெளிநாட்டவர்களை வேலைத்தளங்களில் காண முடிகிறது எனவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கி.மு 3 ஆம் நூற்றாண்டில் இலங்கை மன்னரால் அமைக்கப்பட்டதாகக் கூறப்படும் 'திஸ்ஸமகாராமய வாவி சுத்தம் செய்யப்படுகிறது. மிகவும் விசித்திரமான ஒப்பந்தத்தில் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனத்துக்கு இலங்கை அரசு கட்டணம் ஏதும் செலுத்தவில்லை எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில் திஸ்ஸமகாராமய வாவி துப்புரவு திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் சீனாவின் மக்கள் விடுதலை இராணுவத்தினர் அணிந்திருப்பதைப் போன்ற சீருடைகளை அணிந்த பங்கேற்றவர்கள் யார்? என்பது பேசுபொருளாகியுள்ளது.வாவி துப்புரவுப் பணி என்ற போர்வையில் இலங்கையில் என் நடக்கிறது? எனவும் அந்தச் செய்தி கேள்வி எழுப்பியுள்ளது.

# கிராம சேவகரை அச்சுறுத்திய டிப்பர் சாரதிக்கு விளக்கமறியல்

கிளிநொச்சி, ஜூன் 24

சட்டவிரோத மண்ணகழ்வை கட்டுப்படுத்த முயற்சி எடுத்த கிராம சேவையாளரை டிப்பரால் மோதும் வகையில் அச்சுறுத்திய சாரதியை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவு இட்டுள்ளது.

கடந்த 14ஆம் திகதி சட்டவிரோத மண் அகழ்வை கட்டுப்படுத்த முயற்சி எடுத்த கிராம சேவையாளரை டிப்பரால் மோத முயற்சித்து அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்ட சம்பவம் தொடர்பில் கிராம சேவையாளரினால் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கரவட்டித்திடல் பழைய கண்ணகி அம்மன் கோவில் அருகாமையில் இந்த சம்பவம் இடம்பெற்றது. சட்டவிரோத மண் அகழ்வை கட்டுப்படுத்துவதற்கு கிராம சேவையாளர்கள் தமக்கு ஒத்துழைப்பதில்லை என இறுதியாக இடம் பெற்ற மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடனான கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் சட்டவிரோத மண் அகழ்வை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து கிராம சேவையாளர்களுக்கும் கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரனால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

அந்தப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் குவிக்கப்பட்டு டிப்பர் வாகனத்தில் ஏற்றப்படுகின்றமை தொடர்பில் கிராம சேவையாளர் ரி.கலைரூபனுக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து அப்பகுதியில் இடம்பெறும் சட்ட விரோத செயல்பாட்டை கட்டுப்படுத்த அவர் சம்பவ இடத்துக்கு சென்றுள்ளார்.

இதன் போது சாரதி உட்பட 6பேர் அந்த சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த நிலையில், அவர்களுடன் பேசிய கிராம சேவையாளருக்கு ஆரம்பத்தில் ஒத்துழைப்பு வழங்க முன்வந்த குறித்த குழுவினர், பின்னர் டிப்பர் வாகனத்தினால் கிராம சேவையாளரை மோத முயற்சித்ததுடன், அச்சுறுத்தம் வகையில் நடந்துகொண்டதாக கிராம சேவையாளரினால் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

குறித்த டிப்பர் வாகனத்துக்கு அனுமதிப்பத்திரம் ஏதும் இருந்திருக்கவில்லை எனவும், அப்பகுதி மணல் அகழ்வுக்கு ஏற்ற அனுமதிக்கப்பட்ட பகுதி இல்லை எனவும் தெரிவித்த கிராம சேவையாளர், தனியார் ஒப்பந்த நிறுவனம் ஒன்றின் பெயர் பலகையுடன் குறித்த சட்டவிரோத செயல்பாட்டில் அவர்கள் ஈடுபட்டனரெனவும் குறிப்பிட்டார்.

குறித்த வாகனத்தின் சாரதி ஒட்டுசுட்டான் பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும், தன்னை அச்றுத்திய குறித்த செயல்பாடு தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், தனது பிரதேசத்தில் சட்டவிரோத மண் அகழ்வை கட்டுப்படுத்த பொலிஸார் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டிருந்த தருமபுரம் பொலிஸார், சம்பவத்துடன் தொடர்பு பட்ட சாரதியை கைது செய்தனர். அவரிடம் மேற்கொள்கொள்ளப்பட்ட விசாரணைகளை தொடர்ந்து குறித்த சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிவான், சந்தேக நபரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

## இதுவரை 2,487,297 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது

கொழும்பு, ஜூன் 24

நாட்டில் இதுவரை 2,487,297 பேருக்கு கோவிட் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனை குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய, நேற்றுமுன் தினம் மாத்திரம் 5,131 பேருக்கு சீனாவின் சினோபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

மேலும், சினோபார்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் நேற்று முன்தினம் 15,278 பேருக்கு போடப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் 385 பேருக்கு கோவிசீல்ட் தடுப்பூசியின் இரண் டாவது டோஸ் போடப்பட் டுள்ளது.

இதற்கமைய, இதுவரை 372,675 பேருக்கு கோவிசீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

## மனித நுகர்வுக்கு தகுதியற்ற
# 700 கிலோ கோழி இறைச்சியுடன் வவுனியாவில் ஒருவர் சிக்கினார்!

வவுனியா, ஜுன் 24
மனித நுகர்வுக்கு தகுதியற்ற 700 கிலோகிராம் கோழி இறைச்சியை கொண்டுசென்ற குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டார்.

அநுராதபுரம் பகுதியிலிருந்து வவுனியா நோக்கி 700 கிலோ கிராம் கோழி இறைச்சியை பாதுகாப்பற்ற முறையிலும், நுகர்வோர் பயன்படுத்த முடியாத நிலையிலும் கொண்டுவந்தபோது வவுனியா ஈரட்டைப் பகுதியில் வைத்து கோழி இறைச்சி கொண்டு சென்ற உரிமையாளர் கைது செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பாக வவுனியா தெற்கு பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

# அஸ்ட்ராசெனேகா ஏற்றியவர்களுக்கு இரண்டாவது டோஸ் பைசர் தடுப்பூசி

## அமைச்சர் சன்ன ஜயசுமண அறிவிப்பு

**கொழும்பு, ஜுன் 24**

**அஸ்ட்ராசெனெகா தடுப்பூசி பெற்றவர்களுக்கு இரண்டாவது டோஸ் தடுப்பூசியாக பைசர் தடுப்பூசி வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.**

இதனை ஔடதங்கள் தயாரிப்பு விநியோகம் மற்றும் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

இலங்கை மருந்தகக் கூட்டுத்தாபனத்தினால் மேலும் 78 ஆயிரம் பைசர் தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்படும் என்றும் அவை அடுத்த மூன்று வாரத்துக்குள் இலங்கையை வந்தடையும் என்றும் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன கூறினார்.

இதேவேளை, அஸ்ட்ரா செனேகா தடுப்பூசியைப் பெற்ற வர்களுக்கு பைசர் தடுப்பூசியை வழங்குவதற்கான பரிந்துரைகள் குறித்து அடுத்த இரண்டு வாரங்களில் நிபுணர் குழுவின் அறிக்கை கிடைக்கும் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சர் நாமலுக்கு மேலுமொரு பொறுப்பு?

கொழும்பு, ஜுன் 24
விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர், டிஜிற்றல் இராஜாங்க அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கு மற்றொரு பொறுப்பை வழங்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முடிவு செய்துள்ளாரென தகவல் வெளியாகியுள்ளது.

வியத்மக அமைப்பின் தலைவராக நாமலை நியமிக்க ஜனாதிபதி விரும்புகிறாரென தகவல் வெளியாகியுள்ளது.

கோட்டாபயவை ஜனாதிபதியாக்குவதில் வியத்மக அமைப்பு பெரும் பங்காற்றிருந்தது. கல்வியிலாளர்களை ஒன்றுதிரட்டி, அபிப்பிராய மாற்றம் ஏற்படுத்துவதில் அது தீவிரமாக செயல்பட்டிருந்தது.

கடந்த வாரம் நடைபெற்ற வியத்மக அமைப்பின் நிறைவேற்றுக் கூட்டத்தில் ஜனாதிபதியால் இந்த முன்மொழிவு செய்யப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த முன்மொழிவுக்கு, கலவையான எதிர்வினைகள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த முன்மொழிவுக்கு கணிசமான எதிர்ப்புக்களும் எழுந்துள்ளன.

இந்த நேரத்தில் இதைச் செய்யக்கூடாது என்று சிலர் பரிந்துரைத்துள்ளனர் என்றும் அறியப்படுகிறது.

அந்த அமைப்பின் முக்கியஸ்தரான இராஜாங்க அமைச்சர் நாலக கோதவெவ, இந்த கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறைச்சாலை கொத்தணியால் 19 பேர் இதுவரை உயிரிழப்பு!

கொழும்பு, ஜுன் 24
சிறைச்சாலை கொத்தணியில் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளர்களில் 19 பேர் உயிரிழந்தனரென கொரோனா வைரஸ் தடுப்பு செயலணி தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் 4 ஆம் திகதியிலிருந்து ஏப்ரல் 14 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் சிறைச்சாலை கொத்தணியில் 12 பேர் உயிரிந்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மூன்றாவது கொவிட் அலை ஆரம்பித்ததிலிருந்து இதுவரை 7 பேர் மரணித்தனரெனவும் குறித்த செயலணி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.





# நியமனம் வழங்குமாறு வவுனியாவில் சுகாதார தொண்டர்கள் ஆர்ப்பாட்டம்!

வவுனியா, ஜுன் 24
தகைமை பாராது சேவைக் கால அடிப்படையில் நியமனம் வழங்குமாறு கோரி சுகாதாரத் தொண்டர்களால் ஆர்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பிரதேச செயலகத்திற்கு முன்பாக காலை9.30 மணிக்கு இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தின் போது கருத்து தெரிவித்த அவர்கள்-

சுகாதாரத் தொண்டர்களாகிய நாம் கடந்த சில வருடங்களுக்கு மேலாக எதுவித வேதனமும் இன்றி தொண்டராகக் கடமையாற்றி இருந்தோம்.

இதுவரையும் எமது நியமனம் தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்தமையால் கடந்த 2017-2018 ஆம் ஆண்டுகளில் நியமனம் கோரி 120 நாட்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டதன் விளைவாக 2019 ஆம் ஆண்டு நேர்முக தேர்வு நடத்தப்பட்டு வழங்கப்பட்ட ஏனைய நியமனங்கள் இடைநிறுத்தப்பட்டன.

தற்போது எமது நியமனங்களில் கவனம் செலுத்தாது ஒரு இலட்சம் வேலை வாய்ப்பினூடாக எமது சுகாதாரத் தொண்டர் பட்டியலில் இருந்து சேவைக்காலம் குறைந்தவர்களையும், சுகாதார தொண்டராக கடமையாற்றாதவர்களையும் தெரிவு செய்து நேர்முகத்தேர்வு வவுனியா பிரதேச செயலகத்தில் நடைபெறுகின்றது.

இந்த நேர்முகத்தேர்வை நிறுத்தி நியாயமான முறையில் தொண்டராகச் சேவையாற்றிய அனைத்து சுகாதாரத் தொண்டர்களுக்கும் சேவைகால அடிப்படையில் தகைமை பாராது நியமனங்கள் வழங்குவதற்கு ஆவன செய்து தருமாறு வேண்டி நிற்கின்றோம்-என்றனர்.

இதேவேளை, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வவுனியா பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்திருந்ததுடன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு வழங்குவதற்காக பிரதேச செயலரிடம் மகஜரை கையளித்தனர்.

வடமாகாண பிரதம செயலாளரால் வழங்கப்பட்ட பட்டியலுக்கமைய 28பேருக்கு நேற்று நேர்முகத்தேர்வு இடம்பெற்றது.

ஏனையவர்களின் பட்டியல் எதிர்காலத்தில் கிடைக்கும் பட்சத்தில் நேர்முகத்தேர்வுகளை நடத்துவோம் என்று பிரதேச செயலாளர் ஆர்ப்பாட்டக்காரர்களிடம் தெரிவித்தார்.

# ‘நாயை குரைக்காமல் இருக்க சொல்லுங்கள்’

## சுமந்திரன்-ராகவன் சபையில் வார்த்தை மோதல்

கொழும்பு, ஜுன் 24
“நாயை குரைக்காமல் இருக்க சொல்லுங்கள்” என நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

பாராளுமன்றத்தில் நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கும், பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவனுக்கும் இடையே தர்க்கம் ஏற்பட்டது. இதன்போது, “அந்த நாயை குரைக்காமல் இருக்க சொல்லுங்கள். அதை வெளியில் அனுப்புங்கள்“ என எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய எம்.ஏ.சுமந்திரன், “அரசியல் கைதிகளை விடுவிக்க கோரி அரச தரப்பின் அமைச்சர் ஒருவரே கெஞ்சிக் கேட்கிறார். ஒருவரால் முடியாத விடயத்தையே இப்படி கேட்பார்கள். அரசியல் கைதிகள் விடயத்தை பிச்சைக்காரன் புண் போல நாம் கிளறிக் கொண்டிருப்பதாக அரச தரப்பில் இருந்து ஒருவர் சொல்கிறார். நாங்கள் 11 வருடங்களாக இதை தினமும் பேசி வருகிறோம். நாம் எதிர்க் கட்சியிலிருந்து அதை செய்கிறோம். அரசாங்கம் இதில் அரசியல் செய்யாமல், உண்மையில் கைதிகளை விடுவிக்கவேண்டுமெனில் நாளையே விடுவிக்கலாம். நாளை(இன்று) பூரணை தினம். நாளையே விடுவியுங்கள். இதை பேசிக் கொண்டிருந்து அரசியல் செய்யாதீர்கள்.

அவர்கள் அரசியல் கைதிகள் தான். அவர்கள் ஏன் அரசியல் கைதிகள் என்பதை பலமுறை தெளிவுபடுத்திவிட்டோம். நேற்று (நேற்றுமுன்தினம்) நாமல் ராஜபக்ஷ உரையாற்றிய போது, பின்னாலிருந்த சுரேன் ராகவன், இந்த விடயத்தில் தனக்கும் பங்கிருப்பதாக சமூக ஊடகங்களில் தெரிவித்திருந்தார்.

அரச தரப்பிலிருந்து அவர் அரசியல் கைதிகள் என்கிறார். மற்றவர்கள் இல்லையென்கிறார்கள். நான் சுரேன் ராகவனுக்கும் சவால் விடுகிறேன், அவரால் எத்தனை அரசியல் கைதிகளை விடுவிக்க முடியுமென பார்க்கலாம்-என்றார்.

இதன்போது எழுந்த பெரமுன எம்.பி, சுரேன் ராகவன், கடந்த 11 வருடங்களாக பாராளுமன்றத்தில் இருக்கிறீர்கள். அரசியல் கைதிகள் விடயத்தில் என்ன செய்தீர்கள் என கேள்வியெழுப்பினார்.

பதிலளித்த சுமந்திரன், நான் 11 வருடங்களாக பாராளுமன்றத்தில் இருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அரசியல் கைதிகள் பற்றி பேசுகிறோம். நீங்கள் அறிந்திருக்கவில்லைபோல. நீங்கள் அரச தரப்பில் உள்ளவர். பதவிகளுக்காக இப்படி பேசிக் கொண்டிருப்பீர்கள்“ என்றார்.

கடந்த அரசாங்கத்துடன் இருந்து என்ன செய்தீர்கள் என சுரேன் ராகவன் கேள்வியெழுப்பினார்.

இதன்போது, நூற்றுக்கும் மேற்பட்ட கைதிகளை விடுவித்ததாகவும், அதனால் தாம் திருப்தியடையவில்லை, முழுமையாக அரசியல் கைதிகள் விடுவிக்க வேண்டுமென்பதே தமது நிலைப்பாடு என்றும் சுமந்திரன் கூறினார்.

இருவருக்குமிடையில் சர்ச்சை தோன்ற, நாயை குரைக்காமல் இருக்க சொல்லுங்கள், வெளியில் அனுப்புங்கள் என சுமந்திரன் தெரிவித்தார். (அ)

# யாழில் கொரோனா தொற்றாளர் 4 ஆயிரத்து 919 ஆக அதிகரிப்பு!

## அரச அதிபர் மகேசன் தகவல்



**யாழ்ப்பாணம், ஜுன் 24**

**யாழ்.மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 4ஆயிரத்து 919 ஆக அதிகரித்துள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.**

அத்தோடு குறித்த தொற்றாளர்களில் சுமார் 3 ஆயிரத்து 696 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனரெனவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே கணபதிப்பிள்ளை மகேசன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ். மாவட்டத்தில் இதுவரை 72 பேர் கொரோனா தொற்றினால் உயிரிழந்தனர்.

தற்போது உடுவில் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இரண்டு கிராமங்கள் தனிமைப்படுத்தப் பட்டுள்ளன.

அத்தோடு மாவட்டத்தில் தற்போது 2 ஆயிரத்து 721 குடும்பங்களை சேர்ந்த 8 ஆயிரத்து 71 நபர்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் நாட்டில் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு தற்போது வழங்கட்டுவரும் ஐந்தாயிரம் ரூபாய் கொடுப்பனவு யாழ். மாவட்டத்தில் இதுவரை 71 ஆயிரத்து 721 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது- என்றார்.






# புதிய பொலிஸ் நிலையங்கள் வவுனியாவில் திறந்து வைப்பு

வவுனியா, ஜுன் 24

வவுனியா சிதம்பரபுரம் , நெளுக்குளம் பகுதிகளில் அமைந்துள்ள பொலிஸ் காவலரண்கள் இரண்டும் பொலிஸ் நிலையங்களாக தரமுயர்த்தப் பட்டு நேற்று மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப் பட்டன.


பொதுமக்கள் முறைப்பாடுகள் வழங்கும் செயல் முறையை இலகுவாக்குவதற்காக நாடு முழுவதும் 197 புதிய பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர் தெரிவித்திருந்தார் .

அந்தவகையில் வவுனியா சிதம்பரபுரம் மற்றும் நெளுக்குளம் பகுதிகளில் அமைக்கப் பட்டுள்ள பொலிஸ் காவலரண்கள் புதிய பொலிஸ் நிலையங்களாக தரமுயர்த்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன .

நிகழ்வில் முதன்மை அதிதியாக கலந்துகொண்ட வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மாஅதிபர் சஞ்சீவ தர்மரத்ன புதிய பொலிஸ் நிலையத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லால் செனவிரத்ன, பொலிஸ் அத்தியட்சகர் திஸ்ஸ லால் சில்வா,வவுனியா தலைமை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி மானவடு உட்பட பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வறுமைக்கோட்டிற்குட்பட்ட 20 குடும்பங்களுக்கு பொலிஸாரால் நிவாரண உதவிப்பொருட்கள் வழங்கப் பட்டதுடன்,மாற்று வலுவுடைய சிறுவன் ஒருவருக்கு சக்கரநாற்காலியும் வழங்கப் பட்டது.



# குடியிருப்பு பகுதிகளுக்குள் புகுந்த முதலை!

மட்டக்களப்பு, ஜுன் 24

கல்முனை - மட்டக்களப்பு பிரதான வீதிக்கு அருகாமையிலுள்ள குடியிருப்பு பகுதிகளுக்குள் நேற்று புதன்கிழமை காலை புகுந்த முதலையினால், அப் பகுதியில் பதற்றமான நிலை ஏற்பட்டது.

பிரதேச மக்கள் அறிவித்ததைத் தொடர்ந்து வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் அந்த பகுதிக்கு சென்று முதலையை மீட்டதுடன், உன்னிச்சை காட்டுப்பகுதியில் உள்ள குளத்தில் விடுவித்துள்ளனர்.

## புறக்கணிக்கப்பட்டது தமிழ்

# சுட்டிக்காட்டினார் சுமந்திரன் எம்.பி.: மன்னிப்புக் கோரினார் சபாநாயகர்!

கொழும்பு, ஜுன் 24

அரசியல் பழிவாங்கல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவில் அறிக்கையின் தமிழ் மொழி பெயர்ப்பில் பல்வேறு குளறுபடிகள் உள்ளமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று சிறப்புரிமை விவகாரத்தை எழுப்பி அவர் இதனை சுட்டிக்காட்டினார்.

“அரசியல் பழிவாங்கல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவில் அறிக்கையின் ஆங்கில மொழி பெயர்ப்பை நான் கோரினேன். அது சிங்கள மொழியில் மட்டுமே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டிருந்தது. பின்னர் தமிழ் மொழி பெயர்ப்பு என இறுவட்டு (சிடி) ஒன்று வழங்கப்பட்டது. ஆனால், மொழிபெயர்ப்பில் நிறைய தவறுகள் இருந்தன. சிங்கள மொழியில் வெளியான அறிக்கையில் இருந்த விடயங்கள் பல தமிழ் மொழிபெயர்ப்பில் இருக்கவில்லை.

தமிழ்மொழி பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏன் இந்த அநீதி? இது எனது மொழி உரிமையைப் பாதிக்கிறது. இதற்கு யார் பொறுப்பு? அரசு வெளியிடும் அறிக்கைகள் சிங்களம், ஆங்கிலத்தில் மட்டுமே வெளியாகின்றன என்று அறிகிறேன்” என்றார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர், அப்படி நடந்திருந்தால் மன்னிப்பு கோருவதாகவும், இந்த விடயங்களை எப்படி தீர்ப்பதென கவனமெடுப்பதாகவும் தெரிவித்தார்.

# எதிர்க்கட்சி தலைவர் பதவியில் வெகுவிரைவில் மாற்றம் வரும்

## அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன கூறுகிறார்

கொழும்பு, ஜுன் 24

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பாராளுமன்ற வருகை ஐக்கிய மக்கள் சக்திக்கு பெரும் சவாலாக அமையும். எதிர்க்கட்சி தலைவர் பதவியில் வெகுவிரைவில் மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கிறோம். பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் எவ்வித தொடர்பும் கிடையாது என துறைமுகம் மற்றும் கப்பற்துறை அபிவிருத்தி அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் பாராளுமன்ற வருகை குறித்து ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

நல்லாட்சி அரசாங்கத்தை நாட்டு மக்கள் முழுமையாக ஜனநாயக ரீதியில் புறக்கணித்துள்ளார்கள். ஐக்கிய தேசிய கட்சி மக்களாணைக்கு புறம்பாக செயல்பட்டதை இடம் பெற்று முடிந்த பொதுத்தேர்தலின் பெறுபேற்றின் ஊடாக அறிந்துக் கொள்ள முடிந்தது.

ஐக்கிய தேசிய கட்சிக்கு நாடு தழுவிய ரீதியில் கிடைக்கப் பெற்ற மொத்த வாக்குகளின் அடிப்படையில் ஒரு தேசியப் பட்டியல் ஆசனம் கிடைக்கப் பெற்றது.

பொதுத்தேர்தல் இடம் பெற்று 10 மாதங்களுக்கு பிறகு அந்த ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தின் ஊடாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றுக்கு வருகை தந்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் பாராளுமன்ற வருகை ஐக்கிய மக்கள் சக்தியினருக்கு சவாலாக அமையும். வெகுவிரைவில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கிறோம்.

பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்ரமசிங்க சிறந்த அரசியல்வாதி அரசாங்கத்தின் அனைத்து செயல்பாடுகளையும் எதிர்க்கும் கொள்கையை ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சியினர் கொண்டுள்ளார்கள். பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்ரமசிங்கவுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் எவ்வித தொடர்பும் கிடையாது.

வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினர் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை சிறந்த முறையில் வெற்றிக் கொள்ளமுடியும். அரசாங்கத்துக்குள் கருத்து முரண்பாடுகள் காணப்படுகிறது.

பல்வேறு கொள்கைகளை கொண்ட கட்சிகள் ஒன்றிணைந்து அரசாங்கத்தை அமைக்கும் போது கருத்து முரண்பாடுகள் தோற்றம் பெறுவது இயல்பு. இக்கருத்து முரண்பாடு அரசாங்கத்தை ஒருபோதும் பலவீனப்படுத்தாது-என்றார்.

# 15 பஸ் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஜுன் 24

கடந்த 2 நாட்களுக்குள் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி பயணித்த குற்றச்சாட்டின் கீழ் 15 பஸ் உரிமையாளர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சுகாதார வழிமுறைகளை மீறி பயணிகளை ஏற்றிச் செல்லும் பஸ்களை அடையாளம் காண்பதற்கான சுற்றிவளைப்புகள் நேற்று முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# ரணிலுக்கு எதிராகவே சபைக்குள் போராட்டம்

## ஆளுங்கட்சி எம்.பி கருத்து

கொழும்பு, ஜுன் 24

“ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகவே ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சபைக்குள் போராட்டம் நடத்துகின்றனர். ரணிலுக்கு அஞ்சுகின்றனர். நாங்கள் ரணிலுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.” - என்று ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார தெரிவித்தார்.

பாராளுமன்ற அமர்வு நேற்று நடைபெற்றது. எரிபொருட்களின் விலை உயர்வைக் கண்டித்தும், அதனை குறைக்குமாறு வலியுறுத்தியும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சபைக்குள் போராட்டம் நடத்தினர். கோஷங்களையும் எழுப்பினர்.

இதனால் பெரும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. எனினும், சபை நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையிலேயே சாந்த பண்டார எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

ஈழநாடு






# பரவலாகும் பகிடிவதை

ஷாமலா குமார்

(நேற்றைய தொடர்ச்சி)

### பகிடிவதையை நிறுத்துவது

பல்கலைக்கழகங்களில் இன்னமும் பகிடிவதை தொடர்வது பல வெளி நபர்களுக்கு நம்பமுடியாத விடயமாகவுள்ளது. செயல்படுத்தப்பட்ட சட்டங்களோ, ஆணைக் குழுக்கள் / செயல்குழுக்களோ, மதிப்பாய்வுகளோ, எண்ணற்ற பத்திரிகைக் கட்டுரைகளோ பகிடிவதையை நிறுத்தமுடியாதிருப்பது ஏன் எனும் கேள்வி எழுகிறது.

இதில் முதன்மையாகவிருப்பது பகிடிவதையின் மெய்யான விஸ்தீரணத்தை நாம் தவறாகப் புரிந்து கொண்டுள்ளமையாகும். 1998 இன் பகிடிவதை எதிர்ப்புச் சட்டத்திற்கமைய பகிடிவதைச் செயல்பாடுகளில் ஈடுபடுவோருக்கு பிணையற்ற, கட்டாய சிறைத் தண்டனை வழங்கப்பட வேண்டும். இருப்பினும் அனைத்துப் பகிடிவதை செயல்பாடுகளுக்கும் இவ்வளவு தீவிரமான தண்டனை பொருந்தாதிருப்பதால், பொறுப்பான அதிகாரிகள் இச் சட்டதைச் செயல்படுத்தத் தயங்குகின்றனர்.

பகிடிவதை என்பது ஒரு தனி மனித செயற்பாடு அல்ல. அது குழுக்களாக இயங்குவது. இங்கு குற்றவாளிகளுமே ஒரு கட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களாக இருந்திருக்கிறார்கள். பகிடிவதைச் செயல்பாட்டில் ஈடுபடுகையில் ஒரு மாணவன் கையும் களவுமாகப் பிடிபடுகிறான் என்றால் அவன் உடனடியாக சிரேஷ்ட மாணவன் ஒருவனை நோக்கிக் கை காட்டி விடுகிறான். சிரேஷ்ட மாணவர்கள், கனிஷ்ட மாணவர்களைப் பகிடிவதைச் செயல்பாடுகளைச் செய்யக் கட்டாயப்படுத்துவதோடு அதை மேற்பார்வையும் செய்கின்றனர். தமது விருப்பத்திற்கேற்ப பகிடிவதை செய்யாத போது அவர்கள் இளைய மாணவர்களைத் தண்டிக்கிறார்கள். பகிடிவதை இடம்பெறுவதைக் கண்டும் காணாமல் இருக்கும், சொல்லப் போனால் மறைமுகமாக அதனை அங்கீகரிக்கும் நிறுவனங்களை இப் பகிடிவதை எதிர்ப்புச் சட்டம் உள்ளடக்கத் தவறியுள்ளதோடு, மேற்குறிப்பிடப்பட்ட சிக்கல்களைக் கையாளத் திறனற்றதாகக் காணப்படுகிறது.

யதார்த்தத்தில் பரந்தவொரு சமூகத்தில் வேர் கொண்டிருக்கும் வன்முறைப் போக்கினதும், ஆண்களை உயர்வாகவும் பெண்களைத் தாழ்வாகவும் பார்க்கும் கண்ணோட்டத்தினதும் வெளிப்பாடே பகிடிவதை என்பதால் அதை இனங்காணுவது கடினமானது. கல்வியாளர்கள் மத்தியில் பகிடிவதை தொடர்பான கலந்துரையாடல்களும், பகிடிவதை தொடர்பாக முன்னெடுக்கப்படும் விசாரணைகளும், பகிடிவதையை ஆதரிப்போர் மற்றும் எதிர்ப்போரின் கருத்துக்களுக்கு மத்தியில் பெரிதும் தடம் மாறியிருக்கிறது. சில சமயங்களில் அதிகாரிகளே பகிடிவதைச் செயல்பாடுகளை மூடி மறைப்பதும், பகிடிவதை தொடர்பாக முறைப்பாடு செய்பவர்களும், பகிடிவதைக்குள்ளானவர்களும் பாதுகாக்கப்படாது, கல்வி நிறுவனத்திற்கு அவமதிப்பை உண்டாக்குவதாகப் பழி சுமத்தப்படுவதும், கண்டிக்கப்படுவதும் கவலைக்குரிய விடயங்களாகும்.

பகிடிவதையை முடக்குவதற்கு இராணுவத்தின் தலையீட்டை உண்டுபடுத்துவதற்கு சமீப காலத்தில் முன்வைக்கப்பட்ட பரிந்துரையும் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லை. இராணுவத்தின் தலையீடு அதற்கே தனித்துவமான பகிடிவதைக் கலாசாரத்தையும், வன் முறையையும், சர்வாதிகாரத்தையும், அதிகாரப் படி நிலைகளையும் பல்கலைக் கழகங்களில் தாபித்துவிடும். இது இருப்பதை விட மேலும் சிக்கலான சூழ் நிலையை உருவாக்குவதோடு, இராணுவத்தின் அபிலாஷைகளுக் கிணங்கச்செயற்பட வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டுவிடும்.

### கல்வியும் ஜனநாயகமும்

கல்வியின் அடிப்படைக் கொள்கைகளுக்கும், ஜனநாயகத்துக்கும் எதிர்மறையாக, பல்கலைக்கழகங் களின் கட்டமைப்புக்களுள் ஊடுருவி, மறைவாக இருக்கும், ஆணாதிக்கத்தையும் வன்முறையையும் மையமாகக் கொண்டியங்கும் ஒரு பிரச்னைக்குரிய விடயமாகப் பகிடிவதை இனக்காணப்படும் வரை அதனை ஒழிப்பது சாத்தியமாக அமையாது.

பகிடிவதைக் கலாசாரத்தை எதிர்கொள்வதற்கான முதற்படியாக அதனைப் பார்வையிடும் கண்ணோட்டத்தை மாற்றுவதும், அதை உருவாக்கும் சமூகப் படி நிலைகளை முற்றாக எதிர்ப்பதுமாக அமைய வேண்டும். பல்கலைக்கழகங்களில் தர்க்க ரீதியான கலந்துரையாடல்களை ஊக்குவிக்கும், மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், ஏனைய ஊழியர்களுக்கும் தாம் எதிர் கொண்ட வன்முறைச் சம்பவங்களைப் பேசும், கலைகளூடாக வெளிப்படுத்தும் ஒரு கலாசாரம் உருவாக வேண்டும்.

பகிடிவதை தொடர்பான கொள்கைகளும் சட்டங்களும், அதன் குழுவாக இயங்கும் தன்மையையும், பகிடிவதை எனும் சொல்லுக்குள் அடங்கும் சகல செயற்பாடுகளையும் இனங்காண வேண்டும். நாட்டிலும் பல்கலைக்கழகங்களிலும் நிலவும் வன்முறையோடு அதற்கு இருக்கும் தொடர்பையும் அவை கண்டறிய வேண்டும். பகிடிவதைச் செயற்பாடுகள் அனைத்தும் ஒரே மாதிரியான வையோ, சமனானவையோ அல்ல என்பதையும் கருத்தில் கொள்ளுதல் அவசியம்.

முக்கியமாக, இவ்வாறான கொள்கை களும் சட்டங்களும் மாணவச் செயற்பாடுகள், கல்விச் சுதந்திரம், ஜனநாயகம் போன்றவற்றைப் பதிக்காத வகையில், கலந்துரையாடல்கள், தர்க்கங்கள், வாதங்கள் போன்ற ஜனநாயகத்திற்கு ஏற்புடைய வழிகள் மூலம் தீர்மானிக்கப்பட வேண்டும்.

கல்வி நிறுவனங்கள் தவறியவிடத்து, பகிடிவதைச் செயற்பாடுகள் மூலம் நிவர்த்தி செய்யப்படும் மாணவர்களின் இன்னல்களையும் தேவைகளையும் இனங்காணுவது அத்தியாவசிமானதாகும். கல்வி நிறுவனங்கள் வழங்காத சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக சிரேஷ்ட மாணவர்களில் தங்கும் நிலை மாணவச் சமூகத்தின் மத்தியில் காணப்படுகிறது. ஆங்கில மொழியை விளங்குவதற்குப் பெரும்பாடுபடும் மாணவன், பல்கலைக் கழகங்களின் ஆங்கில வழிக் கல்வியால் பெரிதும் இக்கட்டான ஒரு சூழ் நிலைக்குத் தள்ளப்படுகிறான். அவ்வாறான ஒரு இடறுகோல் இல்லாத போதும், சாதாரணமாக பல்கலைக்கழகக் கல்வி முறைக்கும், வாழ்க்கை முறைக்கும் இசைவாக்கமடைவது அவ்வளவு இலகுவான விடயமல்ல. மாற்றம் நடைபெறும் இக்காலப் பகுதியில் மாணவர்களுக்குத் தேவையான உதவியையும், ஆதரவையும் வழங்குவதற்கு அர்ப்பணிப்புடனும், வினைத்திறனுடனும் இயங்கும் கல்வியாளர்களும், நன்கு திட்டமிடப்பட்ட கற்கை நெறிகளும், செயற்திட்டங்களும் இன்றியமையாதவை.

பகிடிவதைக் கலாசாரம் பல்கலைக்கழகச் சமூகத்துள் நன்கு வேரூன்றியிருப்பதோடு, இங்கு கல்வியாளர்கள், மாணவர்கள், நிர்வாகம், பொதுமக்கள் என அனை வரும் இதற்குப் பொறுப்பு கூறக் கடமைப்பட்டிருக்கின் றோம். எமது பலவீனங்களை ஏற்றுக் கொள்வதுடன், பகிடிவதையை எதிர்ப்பதற்கு மிதமிஞ்சிய வலிமையும், மனத்திடமும், அர்ப்பணிப்பும், ஒற்றுமையும் தேவை என்பதையும் உணர வேண்டும்.

பகிடிவதை என்பது புற்று நோயைப் போன்றது. அதை எதிர்கொள்வதும் கையாளுவதும் வேதனையையும் அசௌகரியத்தையும் உண்டாக்கினாலும் இறுதியில் அது ஒரு உயிர்கொடுக்கும், அத்தியாவசிய செயல்பாடாகிவிடுகிறது. அதைப் புறக்கணிப்பதோ மெதுவான, கொடிய இறப்பிற்கு வழிசெய்வதற்குச் சமானமாகும். ஆகவே வேதனைகளும், துன்பங்களும் நேர்கின்ற போதிலும், பகிடிவதையிலிருந்து விடுதலையான ஒரு பல்கலைக் கழகச் சமூகத்தைக் கட்டியெழுப்புவதை நோக்கித் திட நெஞ்சுடன் செயல்பட நாம் தயாராக வேண்டும்.

- மொழிபெயர்ப்பு: கோபிகா சிவகுமார்

> ‘ஒரு காலத்தில் சீனா தனது கதவுகளைத் திறந்தது. இன்று உலக நாடுகள் சீனாவுக்குத் தமது கதவுகளைத் திறக்கின்றன’ என்று எழுதினார் வாங் யீவி. உலக வணிகம் சீனாவில் மையங்கொள்ள வேண்டும் என்பது ஜி ஜின்பிங்கின் திட்டமாக இருந்தது. டொலருக்குப் பதிலாக யுவானை சர்வதேச நாணயமாக மாற்றுகிற திட்டமும் சீனாவுக்கு இருக்கிறது. இதில் யாதொன்றையும் அமெரிக்கா விரும்பவில்லை.

மு.இராமநாதன்



# சீனாவின் பட்டு பாதை திட்டமும் ‘ஜி –7’ வகுக்கும் ‘எதிர்’ உபாயமும்

**சீனாவின் கீழ் இந்தியாவைச் சுற்றி ஏழு துறைமுகங்கள் உருவாகின்றன. மியான்மரில் 1, பங்களாதேஷில் 1 (சிட்டகாங்), மலேசியாவில் 2, இலங்கையில் 2 (அம்பாந்தோட்டை, கொழும்பு), மாலைதீவு 1. இவை யாவும் இந்தியாவின் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கும் என்று கருதப்படுகிறது.**

இந்த முறை ஜி7 தலைவர்கள் பிரிட்டனில் கூடினார்கள். இரண்டு வடஅமெரிக்க நாடுகள் (அமெரிக்கா, கனடா), நான்கு ஐரோப்பிய நாடுகள் (பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி), ஓர் ஆசிய நாடு (ஜப்பான்) ஆகிய ஏழு நாடுகளின் கூட்டமைப்புதான் ஜி7. கூட்டத்தில் சீனாவுக்கு எதிராகப் பல தீர்மானங்கள் நிறைவேறின. இது எதிர்பார்த்ததுதான். இதில் சீனாவின் ‘பி.ஆர்.ஐ.’ திட்டத்துக்கு எதிராக அமெரிக்கா முன்மொழிந்த ‘பி3டபிள்யு’ திட்டமும் இருந்தது. இது பல அரசியல் நோக்கர்கள் எதிர்பாராதது. இந்தியாவும் ‘பி.ஆர்.ஐ.’ திட்டத்தை எதிர்த்துவருகிறது. 2017 இல் தொடங்கப்பட்டு, இப்போது கட்டுமானத்தில் இருக்கும் சீனத் திட்டத்தை ஏன் இந்தியாவும் ஜி7 நாடுகளும் எதிர்க்கின்றன?

சீன மொழியில் ‘யீ-தாய் யீ-லு’ என்பதற்கு ‘ஒரு பாதை; ஒரு சாலை’ (One Belt One Road) என்று பொருள் சொல்லலாம். ‘பி.ஆர்.ஐ.’ திட்டம் முதலில் அப்படித்தான் அழைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தில் சாலைகள், ரயில் தடங்கள், அடுக்குமாடிக் கட்டிடங்கள், கடல் வழிப் பாதைகள், துறைமுகங்கள், சுரங்கங்கள், பாலங்கள், குழாய்கள், கேபிள் தடங்கள் என்று பல்வேறு உள்கட்டமைப்புப் பணிகள் நடந்துவருகின்றன. இவை சீனாவைப் பல ஆசிய, ஐரோப்பிய, ஆப்பிரிக்க நாடுகளுடன் இணைக்கின்றன.

### பட்டுச் சாலைத் திட்டம்

கி.மு. 2ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 18 ஆம் நூற்றாண்டு வரை உலகின் பல நாடுகளுடன் வணிகம் நடத்திவந்தது சீனா. வரலாற்றில் அந்தப் பாதைகளுக்குப் பட்டுச் சாலை என்று பெயர். அதை நவீனமாக்குவதும் விரிவாக்குவதுமே இப்போதைய திட்டம் என்கிறது சீனா.

இதில் சீனாவைப் பின்வரும் பிராந்தியங்களுடன் இணைக்கும் ஆறு நிலவழிச் சாலைகள் பிரதானமானவை: ஐரோப்பா, ரஷ்யா, மேற்காசியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மியான்மர், இந்தோனேஷியா ஆகியன. மேலும், இந்து மாக்கடல், அத்திலாந்திக் கடல், பசிபிக் கடல் ஆகியவற்றின் வழியாகக் கடல் வழிப் பாதைகளையும் இந்தத் திட்டம் உள்ளடக்கியது. திட்டத்தின் பெயரில் இடம்பெறும் ‘பாதை’ யானது நிலவழிப் பாதைகளையும், ‘சாலை’யானது நீர்வழிப் பாதைகளையும் குறிக்கிறது. திட்டத்தின் பெயர் பின்னாளில் ‘பாதை-சாலைத் திட்ட முன்னெடுப்பு’ (Belt and Road Intiative - (பி.ஆர்.ஐ.) என்று மாறியது.

‘பிஆர்ஐ’ திட்டத்தை 2013-ல் சீன அதிபர் ஜி ஜின்பிங் முன்மொழிந்தார். அப்போதைய மதிப்பீடு 4 டிரில்லியன் டொலர் (ரூ.30 இலட்சம் கோடி). இப்போது பல மடங்கு அதிகரித்திருக்கும். 2017 இல் அது அரசமைப்புச் சட்டத்திலும் உட்படுத்தப்பட்டது. அதே ஆண்டில் கட்டுமானப் பணிகளும் தொடங்கின. சுமார் 70 நாடுகளின் வழியாக இந்த ‘பாதைகளும் சாலைகளும்’ உருவாகின்றன.

### எதற்காக இந்தத் திட்டம்?

சீனா ஏன் இப்படியொரு பிரமாண்டமான திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது? 1978 இல் சீனா தனது கதவுகளை அகலத் திறந்தது. பன்னாட்டு மூலதனம் குவிந்தது. தொழிற்சாலைகள் உருவாகின. உற்பத்தி பெருகியது. ஏற்றுமதி வளர்ந்தது. செல்வம் சேர்ந்தது. தொழில்நுட்பம் வளர்ந்தது. உற்பத்தி மேலும் பெருகியது.

2008 இல் உலகளாவிய பொருளாதார மந்தநிலை வந்தது. வாங்கும் நாடுகளின் சக்தி குறைந்தது.

ஆனால், சீன உற்பத்தி தொடர்ந்தது. பொருட்கள் தேங்கின. அப்போதுதான் தனது விநியோகச் சங்கிலியை நவீனப்படுத்த வேண்டும், சுமை கூலியைக் குறைக்க வேண்டும் என்று முடிவெடுத்தது சீனா. புதிய ‘பாதைகளும் சாலைகளும்’ போக்குவரத்தை எளிதாக்கும். இது சீனாவின் அபரிமிதமான ஏற்றுமதிக்கு உதவும். எண்ணெய், எரிவாயு முதலான இறக்குமதிகளின் வழிகளும் இலகுவாகும். மேலும், சீனாவின் கட்டுமானப் பொருட்களைத் திட்டத்தில் பயன்படுத்த முடியும். 2013 இல் ஜி ஜின்பிங் பதவியேற்றார். திட்ட முன்வரைவையும் வெளியிட்டார். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு அமுலாக்கம் தொடங்கியது.

‘ஒரு காலத்தில் சீனா தனது கதவுகளைத் திறந்தது. இன்று உலக நாடுகள் சீனாவுக்குத் தமது கதவுகளைத் திறக்கின்றன’ என்று எழுதினார் வாங் யீவி. உலக வணிகம் சீனாவில் மையங்கொள்ள வேண்டும் என்பது ஜி ஜின்பிங்கின் திட்டமாக இருந்தது. டொலருக்குப் பதிலாக யுவானை சர்வதேச நாணயமாக மாற்றுகிற திட்டமும் சீனாவுக்கு இருக்கிறது. இதில் யாதொன்றையும் அமெ ரிக்கா விரும்பவில்லை.

### அமெரிக்காவின் குற்றச்சாட்டு

சீனா மீது அமெரிக்கா பிரதானமாக இரண்டு குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறது. இந்தத் திட்டத்திற்காக சீனா சிறிய நாடுகள் பலவற்றுக்குத் தாராளமாகக் கடன் வழங்குகிறது. இவை அந்நாடுகளின் தகுதிக்கு மீறிய கடன்கள். அந்த நாடுகளால் கடன்களைச் செலுத்த முடியாமல் போகும். அப்போது சீனா அவற்றின் மீது வல்லாதிக்கம் செலுத்தும். இது அமெரிக்காவின் முதல் குற்றச்சாட்டு.

அடுத்தது, இந்தப் ‘பாதைகளும் சாலைகளும்’ வணிக நோக்கத்துக்கானவை மட்டுமே எந்தத் துறைமுகமும் கடற்படைத் தளமாக உருவாக்கப்படவில்லை என்று சீனா சொல்லிவருகிறது. அமெரிக்கா இதை நம்ப மறுக்கிறது.

காலப்போக்கில் இவை இராணுவத் தளங்களாகிவிடும் என்பது அமெரிக்காவின் இரண்டாவது குற்றச்சாட்டு.

### இந்தியாவின் அச்சம்

இந்தியாவும் ‘பிஆர்ஐ’ திட்டத்தை ஆதரிக்கவில்லை. பிரதானமாக இரண்டு காரணங்கள். முதலாவது, சீனாவையும் பாகிஸ்தானையும் இணைக்கும் பாதை பாகிஸ்தான்- ஆக்கிரமிப்பு காஷ்மீர் வழியாகச் செல்கிறது. இரண்டாவது திட்டத்தின் கீழ் இந்தியாவைச் சுற்றி ஏழு துறைமுகங்கள் உருவாகின்றன. மியான்மரில் 1, பங்களாதேஷில் 1 (சிட்டகாங்), மலேசியாவில் 2, இலங்கையில் 2 (அம்பாந்தோட்டை, கொழும்பு), மாலைதீவு 1. இவை யாவும் இந்தியாவின் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கும் என்று கருதப்படுகிறது.

இந்தச் சூழலில்தான் அமெரிக்கா ஜி7 நாடுகளின் கூட்டத்தில் சீனாவின் ‘பி.ஆர்.ஐ.’ திட்டத்துக்கு மாற்றாக ‘பி3டபிள்யு’ (Build Back Better World) திட்டத்தை முன்மொழிந்தது. இந்தத் திட்டமும் ‘பாதைகளாலும் சாலைகளாலும்’ கட்டமைக்கப்படும், 40 டிரில்லியன் டாலர் மதிப்பில் உருவாகும், ஏழை நாடுகளிலும் நடுத்தர வருமானமுள்ள நாடுகளிலும் உள்கட்டமைப்பு மேம்படுத்தப்படும், ஜி7 நாடுகள் பங்கேற்கும், சீன ஏகாதிபத்தியம் முறியடிக்கப்படும் என்பதற்கு அப்பால் இப்போதைக்கு மேலதிக விவரங்கள் இல்லை.

### இந்தியாவின் திட்டம்

ஜி7 தொடங்கப்பட்ட எழுபதுகளில் ஏழு உறுப்பு நாடுகளின் வருவாய், உலக வருவாயில் 70% ஆக இருந்தது. இன்று அது 40% ஆகக் குறைந்துவிட்டது. தவிர, ‘பி.ஆர்.ஐ.’ திட்டம் உற்பத்திப் பெருக்கம் இருக்கும் சீனாவுக்குப் பயன்படும் வகையில் வடிவமைக்கப்பட்டது. ஜி7 நாடுகளில் அப்படியான அதீத உற்பத்தி இல்லை. மேலும், இத்தாலி 2019-லேயே ‘பிஆர்ஐ’யில் இணைந்துவிட்டது. ஜேர்மனியும் ‘பி.ஆர்.ஐ.’க்கு சாதகமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, இதில் ஜி7 நாடுகளின் பங்களிப்பு எப்படி இருக்கும், திட்டம் எப்படி உருக்கொள்ளும், பாதை அமையவிருக்கும் நாடுகளுடன் எவ்விதமான உடன்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்பவையெல்லாம் இனிமேல்தான் தெரியவரும்.

ஜி7 நாடுகளின் கூட்டத்தில் இந்தியா விருந்தினராகக் கலந்துகொண்டது. இந்தியா ‘பி3டபிள்யு’ திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தது. மேலதிக விவரங்களுக்குக் காத்திருக்கிறது. இதற்கிடையில் இந்தியா செய்யக் கூடியவை சில உண்டு. தெற்காசியாவில் சீனா செல்வாக்கு பெற்றுவருகிறது. இந்தியாவும் அண்டை நாடுகளுடன் இணக்கத்தைப் பேண வேண்டும். இதன் மூலம் இந்தியா சர்வதேச அரங்கில் சீனாவுக்கு அழுத்தத்தைத் தர முடியும். இந்தியாவுக்கு எதிராக சீனா திரும்பாமல் பார்த்துக்கொள்ள முடியும். ■

# புலமைச் சிகரம்

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை - 6
வினாத்தாள் I

நேரம் - 45 நிமிடம்
ஆசிரியர் - சரத்பாபு

14. கல்வி கற்றவர்கள் அனைவரும் புத்திசாலிகள் அல்லர் எனின்,
    1. புத்திசாலிகள் ஒரு போதும் கல்வி கற்றவர்கள் அல்லர்
    2. கல்வி கற்றவர்கள் இல்லாத எவரும் புத்திசாலிகள் அல்லர்
    3. சில கல்வி கற்காதவர்கள் புத்திசாலிகள் ஆவார்

15. வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.
    ஊசி : நூல் எனில், ரயர் ..............................................
    1. வாகனம் 2. ரியூப் 3. வீதி

16. ஒரு வரிசையில் 28 மாணவர்கள் நிற்கின்றனர். முதலில் நின்று 1, 2, 3 எனக் கூறியவாறு முறையே எண்ணுகின்றனர். பின்னர் கடைசியிலிருந்து 1, 2, 3 எனக் கூறியவாறு முறையே எண்ணுகின்றனர். முதலில் இருந்து இரண்டாவதாக உள்ள மாணவர் முதற் சுற்றில் 2 எனக் கூறியவர், கடைசியிலிருந்து எண்ணும் போது கூறும் இலக்கம் எத்தனை?
    1. 1 2. 2 3. 3


17. 

ஐந்து சம சதுரங்களில் வைத்து உருவாக்கப்பட்ட உரு அருகில் தரப்பட்டுள்ளது. உருவின் பரப்பளவு 125 சதுர சென்ரிமீற்றர் எனில், உருவின் சுற்றளவு எத்தனை சென்ரிமீற்றர்?
    1. 60 2. 64 3. 70

18. 30 நாட்களைக் கொண்ட மாதத்தில் சனி, ஞாயிறு ஆகிய நாட்கள் ஐந்து வீதம் உள்ளன. அம்மாதத்தின் 21 ஆந் திகதி என்ன கிழமை?
    1. புதன் 2. வியாழன் 3. வெள்ளி

19. ஒரு தோடம்பழத்தின் விலை ரூபா 30 உம் ஓர் அப்பிள்பழத்தின் விலை ரூபா 50 உம் ஆகும். அனுலா தோடம்பழம் மற்றும் அப்பிள் பழங்களை வாங்குவதற்குச் செலவிட்ட பணம் ரூபா 330 ஆகும். அனுலா வாங்கிய தோடம்பழங்களின் எண்ணிக்கை
    1. 5 2. 6 3. 3

20. பின்வருமாறு ஆறு பக்கங்களும் A B C D E F எனக் குறிக்கப்பட்டுள்ள ஒரு தாயக்கட்டையின் மூன்று நிலைகள் உள்ளன.




மேலே குறிப்பிட்ட தாயக்கட்டையில் எழுத்து D எனக் குறிக்கப்பட்டுள்ள பக்கத்திற்கு எதிர்ப்பக்கத்திலுள்ள எழுத்து எது?
    1. A 2. B 3. F

21. நான்கு இலக்கங்களைக் கொண்ட ஓர் எண் உள்ளது. அந்த எண்ணில்...
    * முதலாம் இலக்கம் நான்காம் இலக்கத்தின் ஆறு மடங்காகும்
    * இரண்டாம் இலக்கம் மூன்றாம் இலக்கத்தின் மூன்று மடங்காகும்

அவ்வெண் கீழே தரப்பட்டுள்ள எண்ணில் யாதாக இருக்கலாம்?
    1. 6931 2. 1396 3. 6991

* பின்வரும் கூற்றுக்கள் பிழையானவை அவற்றிற்கான காரணங்கள் அடங்கிய விடையைத் தெரிவு செய்க.

22. தெருவில் பிச்சை எடுக்கும் ஒருவன் "ஐயோ! நான் ஓர் ஊமை எனக்கு தர்மம் செய்யுங்கள்" எனக் கூறினான்
    1. தெருவில் பிச்சை எடுக்கத் தடை செய்யப்பட்டுள்ளது
    2. ஊமையால் பேச முடியாது
    3. பிச்சை எடுப்பது நல்ல பழக்கவழக்கம் இல்லை

23. அமாவாசை இரவு வேளையில் மழை பெய்யும் போது வானவில்லைக் காணலாம்.
    1. அமாவாவை இரவில் வானவில் தோன்றுவதில்லை
    2. வானவில் தோன்ற ஒளி இல்லாமை
    3. மழை பெய்யும் போது வானவில் தோன்றுவதில்லை


24. பூங்கா ஒன்றிலுள்ள மல்லிகையில் முதல்நாள் 22 பூக்கள் இருந்தன. செடியிலிருந்து தினமும் காலையில் 5 பூக்கள் பறிக்கப்படும். அதேவேளை ஒவ்வொரு நாளும் புதிதாக 2 பூக்கள் தோன்றும் எனில், 4 ஆம் நாள் மாலையில் செடியில் எத்தனை பூக்கள் இருக்கும்?
    1. 13 2. 09 3. 08

25. மூன்று பாடசாலைகளிலிருந்து வருகை தந்த மாணவர்கள் அணிந்திருந்த இலச்சினைகள் நிறமும், வடிவமும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| பாடசாலை | இலச்சினையின் நிறம் |
|---|---|
| இந்துக் கல்லூரி | சிவப்பு |
| சாகிராக் கல்லூரி | மஞ்சள் |
| யூனியன் கல்லூரி | நீலம் |

| பாடசாலை | இலச்சினையின் வடிவம் |
|---|---|
| ஆண்கள் | முக்கோணம் |
| பெண்கள் | வட்டம் |

மாணவர்கள் அணிந்திருந்த இலச்சினை தொடர்பான சரியான கூற்று எது?
1. சாகிராக் கல்லூரி பெண் மாணவர்கள் வட்ட வடிவான நீல நிற இலச்சினை அணிந்திருந்தனர்
2. இந்துக் கல்லூரி ஆண்பிள்ளைகள் முக்கோண வடிவான மஞ்சள் நிற இலச்சினை அணிந்திருந்தனர்.
3. யூனியன் கல்லூரி மாணவிகள் வட்ட வடிவான நீல நிற இலச்சினை அணிந்திருந்தனர்.

26. 

எதிரேயுள்ள திண்ம உருவிலுள்ள மேற்பரப்புக்களின் எண்ணிக்கையும், விளிம்புகளின் எண்ணிக்கையும் முறையே எத்தனை?
    1. 10, 21 2. 10, 22 3. 12, 24

27. ஒரு சதுர வடிவான காணியின் ஒரு பக்கத்தில் இருந்து பார்க்கும் போது சம இடைவெளியில் 12 தூண்கள் காணப்பட்டன எனின், காணியைச் சுற்றி எத்தனை தூண்கள் நடப்பட்டிருக்கும்?
    1. 48 2. 46 3. 44

# ரணில் நேற்று எம்.பியாக சத்தியப்பிரமாணம்!

கொழும்பு, ஜூன் 24


ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

நேற்று முற்பகல் 10 மணிக்கு பாராளுமன்றம் கூடியதைத் தொடர்ந்து சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன முன்னிலையில் ரணில் விக்கிரமசிங்க எம். பியாக சத்தியப்பிரமாணம் செய்தார்.

அதன்பின்னர் அவர் தனக்கென எதிர்க்கட்சி பக்கத்தில் முன்வரிசையில் ஒதுக்கப்பட்டுள்ள 13 ஆவது ஆசனத்தில் அமர்ந்துகொண்டார்.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவின் ஆசனத்துக்கு அருகில் உள்ள 12 ஆவது ஆசனம் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனுக்கும், 14 ஆவது ஆசனம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

2020ஆம் ஆண்டு ஆகஸ்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி எந்தவொரு மாவட்டத்திலும் ஆசனங்கள் எதனையும் பெற்றுக்கொள்ளாதபோதும், நாடு முழுவதும் பெற்றுக்கொண்ட வாக்கு விகிதத்துக்கு அமைய தேசியப்பட்டியல் ஆசனம் ஒன்றைப் பெற்றுக்கொண்டது. அந்த ஆசனத்துக்கு ரணில் விக்கிரமசிங்கவை நியமிக்க கட்சி தீர்மானித்ததைத் தொடர்ந்து, அது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு சில தினங்களுக்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்தது. இதன்படி நேற்று அவர் பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். (இ)



# கொரோனாவை கட்டுப்படுத்துவதில் சவேந்திரவின் செயலணி படுதோல்வி

## பாராளுமன்றில் ரணில் சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஜூன் 24**

**இலங்கையில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையிலான தேசிய செயற்பாட்டு மையம் படுதோல்வி கண்டுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

அவர் நேற்று தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்ற பின்னர் ஆற்றிய உரையின்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“இலங்கையின் அரசமைப்புக்கு அமைய நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பு அமைச்சரவை மற்றும் பாராளுமன்றத்துக்கு உரியதாகும்.

இந்த அரசு நாட்டில் பெரியவர்களுக்கு வரிச் சலுகைகளை வழங்கி, சிறியவர்களைப் பட்டினியில் போட்டுள்ளதை நாம் அவதானிக்கின்றோம்.

2019ஆம் ஆண்டில் நாட்டில் வெளிநாட்டு நிதி கையிருப்பாக 700 கோடி டொலர்கள் இருந்தன. இப்போது 400 கோடி டொலர் வரையில் குறைவடைந்துள்ளன.

இலங்கைக்குக் கோடிக்கணக்கான வெளிநாட்டு கடன்கள் உள்ள நிலையில், கடன்களில் இருந்து விடுபடுவதற்கான திட்டங்கள் இருக்க வேண்டும்.

சர்வதேச நிதி வழிகளின் ஊடாக கொடுக்கல் - வாங்கலைச் செய்வதே நாட்டை மீட்பதற்காக இருக்கும் ஒரே வழி. அது இல்லையென்றால் அரசு கூறும் திட்டம் என்ன?

கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் முற்றாகத் தோல்வியடைந்துள்ளது. அதிகாரங்கள் அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்துக்குமே இருக்க வேண்டும்.

நிதிச் சபையின் கலந்துரையாடலுக்கு நிதி அமைச்சரோ அல்லது நிதி இராஜாங்க அமைச்சரோ வருவதற்குப் பதிலாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா வருகின்றார். இதனை அனுமதிக்க முடியாது” - என்றார். (இ)

# மட்டு., திருமலையில் சில பகுதிகள் முடக்கம்

கொழும்பு, ஜூன் 24

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களின் சில பகுதிகள் நேற்றுக் காலை 6 மணிமுதல் தனிமைப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் நாகராஜ வலவ்வ கிராம சேவகர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிறைந்துறைச்சேனை கிராம சேவகர் பிரிவின் முதலாம் மற்றும் இரண்டாம் குறுக்கு வீதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், காத்தான்குடி பிரிவு 4, காத்தான்குடி பிரிவு 5 தெற்கு, காத்தான்குடி பிரிவு 6 மேற்கு, புதிய காத்தான்குடி பிரிவு வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அதேநேரம் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கர்பலா வீதி, ஏ.எல்.எஸ். மாவத்தை, நூரானியா பொது மயான வீதி மற்றும் கடற்கரை வீதி என்பனவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. (இ)

# மேல் மாகாணத்தில் இதுவரை 1,28,057 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஜூன் 24

நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் கடந்த ஒக்ரோபர் 4 ஆம் திகதி முதல் நேற்றுக் காலை 6 மணிவரை மேல் மாகாணத்தில் ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 57 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி கடந்த வருடம் ஒக்டோபர் 4 ஆம் திகதி முதல் நேற்றுக் காலை வரை கொழும்பு மாவட்டத்தில் 60 ஆயிரத்து 470 பேருக்கும், கம்பஹா மாவட்டத்தில் 44 ஆயிரத்து 565 பேருக்கும், களுத்துறை மாவட்டத்தில் 23 ஆயிரத்து 22 பேருக்கும் இவ்வாறு வைரஸ் தொற்றியுள்ளது.

அத்துடன், நேற்றுமுன்தினம் மாத்திரம் கொழும்பு மாவட்டத்தில் 322 பேருக்கும், கம்பஹா மாவட்டத்தில் 364 பேருக்கும், களுத்துறை மாவட்டத்தில் 292 பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. (இ)

# கொரோனா 3ஆம் அலையில் 2 ஆயிரத்து 95 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 24

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தின் மூன்றாவது அலையால் ஏப்ரல் 15 ஆம் திகதி முதல் நேற்றுமுன்தினம் வரை 2 ஆயிரத்து 95 பேர் உயிரிழந்தனர்.

இந்தத் தகவலை நேற்றுக் காலை வெளியான கொரோனாப் பரவல் தடுப்புச் செயற்பாட்டு மையத்தின் தரவுகள் தெரிவித்தன.

முதலாவது அலையில் 13 மரணங்களும், இரண்டாவது அலையில் 596 மரணங்களும் பதிவாகின.

அதேவேளை, கொரோனாவால் நாட்டில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 704 ஆக அதிகரித்துள்ளது. (இ)

# மின்சார முறைப்பாடுகளை தெரிவிக்க விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகம்

கொழும்பு, ஜூன் 24

மின்சார சேவை தொடர்பான முறைபாடுகள் குறித்து விசாரித்து தீர்வுகாணும் வகையில் மின்சாரத்துறையின் ஒழுங்குறுத்துகை நிறுவனமான இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு அவசர தொலைபேசி இலக்கமொன்றை 0775 687 387 அறிமுகப்படுத்தியுள்ளது.

நாட்டில் நிலவும் கொரோனா பிரச்சினை காரணமாக மின்சார பாவனையாளர்கள் முறைப்பாடுகளை தெரிவிக்க 0775 687 387 என்ற அவசர தொலைபேசி இலக்கம் ஊடாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவினை தொடர்புகொள்ளலாம்.

இந்த இலக்கத்தினூடாக வட்ஸ்அப், வைபர் மற்றும் இமோ மூலமாகவும் தொடர்புகொள்ளலாம்.

இது தொடர்பாக இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் கொரோனா பிரச்சினை காரணமாக மின்சார பாவனையாளர்கள் முறைபாடுகளை 0775 687 387 என்ற அவசர தொலைபேசி இலக்கம் ஊடாக முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும்.

பாவனையாளர்கள் தங்கள் எழுத்து மூலமான முறைப்பாடுகளை ஒரு புகைப்படம் எடுத்து சமூக வலைத்தளத்தின்ஊடாக பதிவேற்றுவதன் மூலம் அல்லது குறுந்தகவலாக டைப் செய்து சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

குறுகிய காலத்தில் சிறப்பான சேவையை பெற்றுக்கொடுப்பதற்கு பெயர், முகவரி, தொலைப்பேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி (இருப்பின்), மின்சார கணக்கு இலக்கம், முறைப்பாடு விபரம், தொடர்புடைய இணைப்புகள் (இருப்பின்) ஆகியவற்றை குறிப்பிடுமாறு பாவனையாளர்கள் தயவுசெய்து அறிவுறுத்தப்படுகிறார்கள். முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், குறிப்பு இலக்கமொன்று பாவனையாளர்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

விசாரணைகள் தொடர்பில் கேட்டறியவும், முறைப்பாடுகளை தாக்கல் செய்யும் போது ஏதேனும் சிக்கல் ஏற்பட்டால், பாவனையாளர் மேற்படி இலக்கத்தின் ஊடாக ஒரு அதிகாரியை தொடர்புகொள்ளலாம். அதற்கமைய அதிகாரிகளை நேரில் சந்திப்பதைத் தவிர்த்து ஒன்லைன் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாக அதிகாரிகளைத் தொடர்புகொள்ளுமாறு பொதுமக்களும், ஏனைய பங்குதாரர்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இந்தச் சேவைக்கு மேலதிகமாக, பொதுமக்கள் மற்றும் பங்குதாரர்கள் 0112392607 அல்லது 0112392608 என்ற தொலைபேசி இலக்கங்கள் மற்றும் info@pucsl.gov.lk அல்லது customers@pucsl.gov.lk அல்லது www.facebook.com/pucsl ஊடாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவைத் தொடர்புகொள்ளலாம். (இ)

ஈழநாடு





# 'அப்பிள் டெய்லி' பத்திரிகை நேற்று நள்ளிரவு மூடப்பட்டது!

ஹொங்கொங், ஜூன் 24

ஹொங்கொங்கின் ஜனநாயக சார்பு நாளிதழான அப்பிள் டெய்லி, அதிகாரிகளின் அழுத்தம் நேற்று நள்ளிரவுடன் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனா அண்மையில் அறிமுகப்படுத்திய சர்ச்சைக்குரிய தேசிய பாதுகாப்பு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டின்பேரில் அப்பிள் டெய்லி நாளிதழின் அலுவலகம் கடந்த வாரம் பொலிஸாரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அத்துடன், அந்த நாளிதழின் பிரதம ஆசிரியர் உட்பட 5 நிர்வாகிகளும் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், அந்த நிறுவனத்துக்கு சொந்தமான சுமார் 50 கோடி ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் முடக்கப்பட்டன. இதனால், அந்த நிறுவனத்தை நடத்தமுடியாத நிலை ஏற்பட்டது. அத்துடன், மேலும் கைதுகள் தொடரும் என்று சீன அதிகாரிகள் எச்சரித்திருந்தனர்.

ஹொங்கொங்கில் ஜனநாயக உரிமைகளை வலியுறுத்தும் பத்திரிகையாக அப்பிள் டெய்லி உள்ளது. இதன் நிறுவனரான ஜிம்மி லாய் போராட்டங்களை தூண்டினார் என்ற குற்றச்சாட்டில் அண்மையில் 20 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக வெள்ளிக்கிழமையுடன் இந்த நாளிதழ் மூடப்படும் என்று அறிவிப்பு வெளியாகியிருந்தது. ஆனால், ஊழியர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு நள்ளிரவுக்கு பின்னர் உடனடியாக செயல்பாட்டை நிறுத்துவதாக நேற்று அதன் நிர்வாகம் அறிவித்தது.

26 ஆண்டுகள் தொடர்ச்சியாக வெளியான அப்பிள் டெய்லி நேற்று நள்ளிரவுடன் மூடப்பட்டபோதிலும், அதன் கட்டுரையாளர்கள் மீதான நடவடிக்கை தொடரும் என்று சீனா எச்சரித்ததாக நாளிதழின் ஆலோசகரான மார்க் சைமன் பி.பி.சிக்கு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அமெரிக்காவுடன் பேச்சு கிடையாது!

## வடகொரியா அறிவிப்பு



பியோங்யாங், ஜூன் 24

அமெரிக்காவுடன் ஒரு போதும் வடகொரியா பேச்சில் ஈடுபடாது" என்று அந்த நாட்டின் ஜனாதிபதி கிம் ஜோங் உன்னின் சகோதரி கிம் யோ ஜோங் தெரிவித்துள்ளார்.

"அமெரிக்காவுடன் பேச்சு நடத்தவும் தயாராக இருக்க வேண்டும் ஆனால், அதைவிட அதிகமாக அந்த நாட்டை எதிர்கொள்ளவும் ஆயத்தமாக இருக்க வேண்டும்" என்று கடந்த வாரம் கிம் ஜோங் உன் கூறியிருந்தார்.

இதையடுத்து, இருதரப்பு பேச்சு மீண்டும் தொடங்கலாம் என்று அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் கிம் யோ ஜோங் கூறினாரென வட கொரிய அரசுக்குச் சொந்தமான கே.சி.என்.ஏ. செய்தி நிறுவனம், "அமெரிக்காவுடன் வட கொரியா பேச்சில் ஈடுபடத் தயாராக இருப்பதாக அமெரிக்க அரசு நம்புகிறது. தங்களைத் தாங்களே திருப்திப்படுத்த இந்த நம்பிக்கை உதவலாம். ஆனால், உண்மையில் அதற்கான முயற்சியில் அமெரிக்கா இறங்கினால், அந்த நாட்டுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சும்" என்று குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# சீனாவில் உய்குர் முஸ்லிம்கள்மீது முகாம்களில் துன்புறுத்தல்கள்!

## ஆய்வுக்கு அனுமதிக்குமாறு 40 நாடுகள் வலியுறுத்தல்

ஜெனிவா, ஜூன் 24

"சீனாவின் சின்சியாங் மாநிலத்துக்கு செல்ல உடனடியாக அனுமதி அளிக்க வேண்டும்", என்று 40 இற்கும் மேற்பட்ட நாடுகள், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் வலியுறுத்தியுள்ளன.

சீனாவின் சிறுபான்மையினரான உய்குர் முஸ்லிம்கள், சின்சியாங் மாநிலத்திலுள்ள முகாம்களில் தடுத்து வைக்கப் பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாகின்றனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே அந்த நாடுகள் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளன.

கனடாவில், பழங்குடியின மக்களுக்கு எதிராக நடத்தப்படும் மனித உரிமைகள் மீறல்கள் குறித்து மிகுந்த கவலைக்கு உள்ளாவதாக மனித உரிமைகள் பேரவையில் சீனப் பிரதிநிதி கூறினார். ஆனால், சீனாவின்




சின்சியாங் மாநிலத்தில் 10 இலட்சத்துக்கும் அதிகமான உய்குர் முஸ்லிம்கள் சட்டத்துக்குப் புறம்பாக முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள், மனித உரிமைகள் மீறல்களுக்கு உள்ளாகின்றமை குறித்து பல்வேறு அறிக்கைகள் வெளியாகியுள்ளன. இது குறித்து ஆய்வு செய்ய சீனாவின் சின் சியாங் மாநிலத்துக்கு செல்ல உடனடியாக அனுமதி அளிக்க வேண்டும். மேலும் இதுகுறித்து ஐ.நா., ஆய்வு நடத்தவேண்டும் என்றும் அந்த நாடுகள் வலியுறுத்தியுள்ளன. (ஐ)

# இனி முகக்கவசம் கட்டாயமில்லை!

ரோம், ஜூன் 24

கொரோனா பரவல் குறைந்ததைத் தொடர்ந்து பொது இடங் களில் முகக்கவசம் அணியத் தேவையில்லை என்று இத்தாலி அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து இத்தாலி சுகாதாரத்துறை விடுத்த செய்தியில், "இத்தாலியில் கொரோனா தொற்று குறைந்து வருவதால் இனி பொது இடங்களில் முகக்கவசம் அணியத் தேவையில்லை. இந்த நடைமுறை எதிர்வரும் 28ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகிறது. இருப்பினும் கொரோனா பரவல் தீவிரமாக இருக்கும் பகுதிகள் மற்றும் கூட்ட நெரிசல் அதிகம் உள்ள பகுதிகளில் மக்கள் முகக்கவசம் அணிய வேண்டும்" என்று கூறியுள்ளது.

கொரோனா பாதிப்பு அதிகம் ஏற்பட்ட நாடுகளில் இத்தாலியும் ஒன்று. தற்போது கொரோனா பாதிப்பிலிருந்து மீண்டுள்ளது. இத்தாலியில் இதுவரை 52வீதத்துக்கும் அதிகமான மக்களுக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

தடுப்பூசிகளைப் பெருமளவு செலுத்திய இஸ்ரேல், அமெரிக்கா, தென்கொரியா, கனடா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் பொது வெளியில் முகக்கவசங்கள் அணிய வேண்டாம் என்று அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்தியாவில் தொற்று 3 கோடி

புதுடில்லி, ஜூன் 24

இந்தியாவில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 3 கோடியை கடந் துள்ளது. நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் 50, 848 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து மொத்தத் தொறாளர்களின் எண்ணிக்கை 3 கோடியே 28 ஆயிரத்து 709 ஆக உயர்ந்துள்ளதாக இந்திய மத்திய சுகாதார அமைச்சகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, நேற்று நாடு முழுவதும் ஒரே நாளில் 1,358 பேர் கொரோனாவுக்கு பலியா கினர். இதன்மூலம் கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்க ளின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 90 ஆயிரத்து 660ஆக உயர்ந்துள்ளது. (ஐ)

# இரு வேறு தடுப்பூசிகளை பெற்றார் ஜேர்மன் தலைவர்



பெர்லின், ஜூன் 24

ஜேர்மனியின் ஜனாதிபதி ஏஞ்சலா மெர்கலா இருவேறு கொரோனா தடுப்பூசிகளை பெற்றுள்ளார். அவர் முதல் டோஸாக அஸ்ட்ரா ஸெனாகாவையும், இரண்டாவது தடுப்பூசியாக மொடர்னா தடுப்பூசியையும் பெற்றுள்ளார்.

ஜேர்மனி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் அஸ்ட்ரா ஸெனெகா நிறுவனத்தின் தடுப்பூசி பெற்ற சிலருக்கு இரத்தம் உறைதல் போன்ற பிரச்னைகள் ஏற்பட்டன. இதனால், 60 வயதைக் கடந்தவர்களுக்கு அஸ்ட்ரா ஸெனெகா தடுப்பூசி செலுத்துவது நிறுத்தப்பட்டது.

தனால் முதல் டோஸாக அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசி போட்டுக்கொண்டவர்கள், அடுத்த டோஸாக வேறு தடுப்பூசி போட்டுக்கொள்ளலாம் என்று அந்த நாடு அறிவுறுத்தியது.

இந்த நிலையில், 66 வயதான ஜேர்மனியின் ஜனாதிபதி ஏஞ்சலா மெர்கல், கடந்த ஏப்ரல் மாதம் முதல் டோஸாக அஸ்ட்ரா ஸெனெகா தடுப் பூசியும், தற்போது இரண்டாவது டோஸாக மொடர்னா தடுப்பூசியும் போட்டுக்காண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கியூபாவின் அப்தலா தடுப்பூசி 92.28 வீதம் பலனளிக்கின்றது!

ஹவானா, ஜூன் 24

கியூபாவின் தயாரிப்பான அப்தலா கொரோனா தடுப்பூசி 92.28 வீதம் பலனளிக்கின்றது என்று அந்த நாடு அறிவித்துள்ளது.

சில நாட்களுக்கு முன்னர் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட சோபேரனா தடுப்பூசி குறித்த அறிவிப்பை கியூபா வெளியிட்டது. இதில் மூன்று டோஸ்களைக் கொண்ட சோபேரனா தடுப்பூசி தனது இரண்டு டோஸ்களிலே கெரோனா வைரஸுக்கு எதிராக 62% பலனளிக்கிறது என்று கியூபா தெரிவித்தது.

இந்த நிலையில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மற்றொரு தடுப்பூசியான அப்தலா தடுப்பூசி குறித்த விவரத்தை கியூபா வெளியிட்டுள்ளது.

அப்தலா கொரோனா தடுப்பூசி மூன்று டோஸ்களைக் கொண்டது. மூன்றாம் கட்டப் பரிசோதனையில் அப்தலா வைரஸ் கரோனா வைரஸுக்கு எதிராக 92.28 வீதம் பலனளிக்கிறது எனக் கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து கியூப அதிபர் மிகல் டையஸ் கேனல் கூறும் போது, "பின்லே இன்ஸ்ரியூட், ஜெனிடிக் பொறியியல் மற்றும் உயிரிஆய்வு மையத்தில் உள்ள விஞ்ஞானிகள் பல தடைகளுக்கு இடையே இரண்டு பயனுள்ள கொரோனா தடுப்பூசிகளைக் கண்டுபிடித்துள்ளனர். விரைவில் இரண்டு தடுப்பூசிகளும் பயன்பாட்டுக்கு வரவுள்ளன" என்றார்.

ஆர்ஜென்ரீனா, மெக்சிகோ, வியட்நாம், வெனிசுலா ஆகிய நாடுகள் கியூபாவிடமிருந்து கொரோனா தடுப்பூசிகள் வாங்குவதற்கு ஆர்வம் தெரிவித்துள்ளன. (ஐ)

# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் நியூஸிலாந்து விறுவிறுப்பு

சௌதாம்ப்டன், ஜூன் 24

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி சமநிலையில் முடிவடையும் நிலையே நேற்று மாலை வரை காணப்பட்டது. ஆனாலும் இரவு 9.30 மணி நிலவரத்தின் அடிப்படையில் நியூஸிலாந்து வேகமாக துடுப்பெடுத்தாட முனைந்தமையால் போட்டி விறுவிறுப்படைந்தது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி இங்கிலாந்தின் சௌதாம்ப்டனில் நடக்கிறது. இதில் இந்தியா - நியூஸிலாந்து அணிகள் மோதுகின்றன. மழையால் முதலாம், நான்காம் நாள் ஆட்டங்கள் நடைபெறாத நிலையில் வெற்றி - தோல்வியை தீர்மானிக்கும் பொருட்டு ஒரு நாள் மேலதிகமாக வழங்கப்பட்டது.

முன்னதாக ஐந்தாம் நாளில், மதிய போசனத்துக்காக ஆட்டம் நிறுத்தப்பட்டபோது நியூஸிலாந்து 5 விக்கெட்கள் இழப்புக்கு 135 ஓட்டங்களை எடுத்திருந்தது. வில்லியம்ஸன் 19, கிராண்ட்ஹோம் ஓட்டம் எதையும் எடுக்காமல் இருந்தனர்.

மதிய போசனத்தின் பின்னர் தொடர்ந்த ஆட்டத்தில் நியூஸலாந்து மளமளவென்று விக்கெட்களை இழக்க ஆரம்பித்தது.

கிராண்ட்ஹோம் 13 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முஹமட் ஷமியின் பந்தில் வீழ்ந்தார். அடுத்து வந்த ஜமைசன் 21 ஓட்டங்களே எடுத்தார். தொடர்ந்து வில்லியம்ஸன் 49, சௌதி 30, நெய்ல் வோக்னர் 0 என்று ஆட்டமிழக்க 249 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.



இந்தியாவின் பந்துவீச்சில் முஹமட் ஷமி 4, இஷாந்த் சர்மா 3, அஸ்வின் 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது இந்திய அணி. தேநீர் இடைவேளை வரை ஆடுவதுடன் வேகமாக ஓட்டங்களை குவிப்பது என்ற நோக்கில் இந்தியா களமிறங்கியது.

நேற்றைய நாளில் 98 ஓவர்களை வீச முடியும் என்ற நிலையிலேயே இந்தியா இந்த நிலைப்பாட்டை நோக்கி நகர்ந்தது. ஆனால், இந்திய அணியால் தேநீர் இடைவேளை வரை தாக்குப்பிடிக்க முடியவில்லை.

ஷப்மன் கில் 8, ரோஹித் சர்மா 30, புஜாரா 15, விராட் கோலி, 13 ரஹானே 15, ஜடேஜா 16 அஸ்வின் 7 என்று முக்கிய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழக்க இந்தியா தடுமாறியது. எனினும் ரிஷப் பந்த் ஓரளவுக்குப் போராடினார். அவர் 41 ஓட்டங்களை எடுத்தார். இதுவே இரண்டாவது இனிங்ஸில் அந்த அணியின் வீரர் பெற்ற அதிகூடிய ஓட்டமாக அமைந்தது.

இறுதியில் 170 ஓட்டங்களுக்கு இந்தியா சகல விக்கெட்களையும் இழந்தது. நேற்றைய நாளில் இந்தியா 43 ஓவர்கள் தாக்குப்பிடித்திருந்தது.

நியூஸிலாந்தின் பந்துவீச்சில் ரிம் சௌதி 4, போல்ட் 3, ஜமைசன் 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

139 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த நியூஸிலாந்து அணி வேகமாக ஓட்டங்களை குவிக்க முனைந்தது. ரொம் லதம் 9, கொன்வே 19 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

எனினும், அடுத்துக் களமிறங்கிய அணித் தலைவர் கேன் வில்லியம்ஸன், றோஸ் ரெயிலர் ஆகியோர் அடித்தாட முனைந்தனர். இதனால், நியூஸிலாந்து 27 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 70 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதனால், போட்டி முடிவு நியூஸிலாந்துக்கு சாதகமாக திரும்ப ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



### யூரோ கிண்ண உதைபந்தாட்டம்:

## நெதர்லாந்து ‘ஹட்ரிக்’ வெற்றி 2ஆவது சுற்றுக்கு முன்னேற்றம்!

ஆம்ஸ்ரர்டாம், ஜூன் 24

வடக்கு மசிடோனியாவுக்கு எதிராகப் பெற்ற ஹட்ரிக் வெற்றியுடன் யூரோ கிண்ணத் உதைபந்தாட்டத் தொடரின் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது நெதர்லாந்து அணி.

ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான யூரோ கிண்ண உதைபந்தாட்டத் தொடர் தற்போது நடக்கிறது. இதில், நெதர்லாந்து தலைநகர் ஆம்ஸ்ரர்டாமில் நேற்று முன்தினம் நடந்த ‘சி’ பிரிவு லீக் போட்டியில் நெதர்லாந்து, வடக்கு மசிடோனியா அணிகள் மோதின.

போட்டியின் 24ஆவது நிமிடத்தில் நெதர்லாந்தின் மெம்பிஸ் திபே ஒரு கோல் அடித்தார். இரண்டாவது பாதி ஆட்டத்தில் நெதர்லாந்து வீரர் ஜோர்ஜினியோ விஜ்நல்டாம் 51, 58ஆவது நிமிடங்களில் கோல் அடித்தார்.

முடிவில் நெதர்லாந்து அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்தத் தொடரில் ‘ஹட்ரிக்’ வெற்றி பெற்ற நெதர்லாந்து 9 புள்ளிகளுடன் அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

மற்றொரு போட்டியில் ஆஸ்திரியா, 1-0 என்ற கோல் கணக்கில் உக்ரைனை வென்று அதிர்ச்சி கொடுத்தது. (ஐ)



## கோபா அமெரிக்க தொடர்: பெருவுக்கு முதல் வெற்றி!

பிரேஸிலியா, ஜூன் 24

கோபா உதைபந்தாட்டத் தொடரில் பெரு அணி முதல் வெற்றியை பதிவு செய்துள்ளது. கொலம்பியா அணிக்கு எதிரான போட்டியையே அந்த அணி வெற்றி பெற்றது.

தென்னமெரிக்க நாடுகள் மோதும் கோபா அமெரிக்க உதைபந்தாட்டத் தொடர் பிரேஸிலில் நடக்கிறது. இதில் நேற்று முன்தினம் ‘பி’ பிரிவு போட்டியில் பெரு, கொலம்பிய அணிகள் மோதின.

போட்டியின் 17ஆவது நிமிடத்தில் பெரு வீரர் பெனா ஒரு கோல் அடித்தார். முதல் பாதியில் பெரு அணி 1-0 என்று முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியில் கொலம்பியா அணிக்கு தண்டனை உதை (பெனால்டி) கிடைத்தது. இதை போர்ஜா கோலாக மாற்றினார். 64 வது நிமிடம் கொலம்பிய வீரர் எர்ரி மினா, சுயகோல் அடித்து அதிர்ச்சி கொடுத்தார். முடிவில் பெரு அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதே பிரிவில் நடந்த மற்றொரு போட்டியில் வெனிசுலா-ஈக்குவடோர் அணிகள் மோதின. இந்தப் போட்டி 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது. (ஐ)

## ‘16 அணிகள்’ சுற்றுக்கு சுவிஸ் முன்னேற்றம்!

ஜெனிவா, ஜூன் 24

யூரோ கிண்ண உதைபந்தாட்ட தொடரில் வெளியேறும் நிலையிலிருந்த சுவிற்சர்லாந்து அணி இரண்டாவது சுற்றான 16 அணிகள் சுற்றுக்கு முன்னேறியுள்ளது. பின்லாந்து அணியின் தோல்வியாலேயே இந்த சுவிற்சர்லாந்துக்கு இந்த சந்தர்ப்பம் கிடைத்தது.

யூரோ உதைபந்தாட்ட தொடரில் ஏ பிரிவில் சுவிற்சர்லாந்து இடம்பெற்றிருந்தது. இந்தப் பிரிவில் இத்தாலி, வேல்ஸ் அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறியிருந்தன.

அடுத்த இடத்தில் சுவிற்சர்லாந்து இருந்தாலும், பின்லாந்து - உக்ரைன் அணிகளின் மோதலே மூன்றாவதாக அடுத்த சுற்றுக்குள் நுழையும் அணியும் தீர்மானிக்கும் போட்டியாக இருந்தது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு நடந்த போட்டியில் பின்லாந்து 2-0 என்ற கோல் கணக்கில் தோல்வியை தழுவியதால் இரு அணிகளும் 3 புள்ளிகளைப் பெற்றன. இதனால் 4 புள்ளிகளுடன் இருந்த சுவிற்சர் லாந்து 16 அணிகள் சுற்றுக்கு முன்னேறியது. (ஐ)





### யூரோ கிண்ண உதைபந்தாட்டம்:

## டென்மார்க் பெருவெற்றி வெளியேறியது ரஷ்யா!

கோபன்ஹேகன், ஜூன் 24

ரஷ்யாவுக்கு அதிர்ச்சி கொடுத்து 4-1 என்ற கோல் கணக்கில் டென்மார்க் வெற்றி பெற்றது. இதனால், டென்மார்க் இரண்டாவது சுற்றான 16 அணிகள் சுற்றுக்குள் நுழைய, ரஷ்யா தொடரிலிருந்து வெளியேறியது.

யூரோ கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் டென்மார்க் தலைநகர் கோபன்ஹேகனில் நடந்த ‘பி’ பிரிவுக்கான போட்டியில் டென்மார்க், ரஷ்ய அணிகள் மோதின.

முன்னணி வீரர் எரிக்சன் மயங்கி சரிந்த சோகத்தில் இருந்த டென்மார்க், முதல் இரு போட்டிகளில் தோற்று பட்டியலில் கடைசி இடத்தில் இருந்தது. இந்த முறை ரஷ்யாவுக்கு எதிராக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. 38ஆவது நிமிடத்தில் டம்ஸ்கார்ட் ஒரு கோல் அடிக்க முதல் பாதியில் டென்மார்க் 1-0 என்று முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியில் எழுச்சி பெற்ற டென்மார்க் அணிக்கு போல்சன் (59), கிறிஸ்ரென்சன் (79), மிக்கேல் (82) என வரிசையாக தலா ஒரு கோல் அடித்து கைகொடுத்தனர்.

ரஷ்யாவுக்கு 70 வது நிமிடம் தண்டனை உதை கிடைத்தது. இதை தியுபா கோலாக மாற்றினார். முடிவில் டென்மார்க் அணி 4-1 என்ற கணக்கில் ரஷ்யாவை வென்றது.

‘பி’ பிரிவில் 9 புள்ளியுடன் முதலிடம் பெற்ற பெல்ஜியம் 16 அணிகள் சுற்றுக்கு முன்னேறியது. டென்மார்க், பின்லாந்து, ரஷ்யா தலா 3 புள்ளிகள் பெற்றன. எனினும் கோல் கள் அடிப்படையில் 2ஆவது இடம் பிடித்த டென்மார்க், அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது. மற்ற அணிகளின் முடிவை பொறுத்து பின்லாந்தின் தகுதி முடிவு செய்யப்படும். ரஷ்யா தொடரில் இருந்து வெளியேறியது.

# தமிழ் மக்களின் காணிகளை மீளக் கையளிக்க வேண்டும்

## வெளிநாடுகளுக்கு வழங்கக்கூடாது என அரசிடம் கஜேந்திரன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 24

**"வடக்கு, கிழக்கில் எந்தவொரு பகுதியையும் தமிழ் மக்களின் விருப்பங்களுக்கு மாறாக வெளிநாடுகளுக்கு குத்தகைக்கு வழங்கக்கூடாது. தமிழ் மக்களின் காணிகளை அவர்களிடமே மீளக் கையளிக்கவேண்டும் என்று அரசிடம் கேட்டுக்கொள்கின்றோம்."**



- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபன அபிவிருத்தி திருத்தச் சட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"போரின் பின்னர் வடக்கு, கிழக்கில் தேசியப் பாதுகாப்பு என்ற பெயரில் படையினரால் பல ஏக்கர் காணிகள் கையகப் படுத்தப்பட்டுள்ளன. அந்தக் காணிகளில் சில பகுதி சீனாவுக் குத் குத்தகைக்கு வழங்க தற்போது திட்டமிடப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் யாழ். கீரிமலைப் பகுதியில் உள்ள ஜனாதிபதி மாளிகையை குத்தகைக்கு வழங்கத் திட்டமிடப் பட்டுள்ளது. இந்தச் செயல்பாட்டை வன்மையாகக் கண்டிக்கின்றோம்" - என்றார். (இ)

# மோசடியான வகையில் எரிவாயுவின் விலை அதிகரிப்பு; மக்கள் ஏமாற்றம்!

## சபையில் அநுரகுமார எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 24

சமையல் எரிவாயு விலையை அதிகரிப்பதற்கு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அனுமதிக்காத நிலையில் மோசடியான வகையில் விலை அதிகரிப்பை மேற்கொண்டு நுகர்வோரை எரிவாயு நிறுவனங்கள் ஏமாற்றியுள்ளன என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. குற்றஞ்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிலையியல் கட்டளை 27/2 இன் கீழ் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும்போதே இவ்வாறு குற்றம் சாட்டிய அவர், மேலும் தெரிவிக்கையில்,



"புதிய சமையல் எரிவாயு சிலிண்டரை அறிமுகப்படுத்துவதாக கூறி, 12.5 கிலோவாக இருந்த சிலிண்டரின் நிறையை 9.8 கிலோவாகக் குறைத்து சிலிண்டரின் விலை 100 ரூபாயினால் குறைக்கப்பட்டிருந்தது. ஆனால், இருந்த விலையை விடவும் புதிய சிலிண்டரில் கிலோ ஒன்றின் விலை 32 ரூபாயால் அதிகரித்துள்ளது. இதன் மூலம் நுகர்வோர் ஏமாற்றப் பட்டுள்ளனர்.

நுகர்வோர் அதிகார சபை விலையை அதிகரிப்புக்கு இடமளிக்காத போதும், மோசடியான வகையில் விலையை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நுகர்வோர் அதிகார சபை இந்த விடயம் தொடர்பில் வழக்குப் போட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால், இது அமைச்சின் கீழ் உள்ள விடயமாக இருக்கும்போது ஏன் நீதிமன்றத்துக்குப் போக வேண்டும்? ஊழலை மறைப்பதற்காகவே வழக்கு விடயத்தை இவர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

சந்தையில் 12.5 கிலேடி சிலிண்டருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. இதனால் புதிய சிலிண்டரைக் கொள்வனவு செய்யும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டிருந்தனர். இந்நிலையில், புதிய எரிவாயு சிலிண்டருக்கு நுகர்வோர் அதிகார சபை அனுமதி வழங்கியதா? புதிய வகை எரிவாயுவை விநியோ கிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக முன்னெடுக்கப்படும் பிரசாரங்கள் உண்மையாவையா? அது உண்மையென்றால் இப்போது இருக்கும் எரிவாயு செயல் தன்மை குறைந்ததா? பாதுகாப்பற்றதா? சர்வதேச தரத்தில் இல்லையா? என்பதனைக் கூற வேண்டும்.

நாடு பூராகவும் எரிவாயு தட்டுப்பாடு நிலவுகின்றது எனக் கூறப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பில் அரசின் நடவடிக்கை என்ன?" - என்று கேள்வி எழுப்பினார். (இ)

# 150 இற்கும் மேற்பட்ட கடல் உயிரினங்களின் உடல்கள் இதுவரை கரை ஒதுங்கியுள்ளன

கொழும்பு, ஜூன் 24

இலங்கைக் கடற்பரப்பில் 'எக்ஸ் - பிரஸ் பேர்ல்' கப்பல் விபத்தால் ஏற்பட்டுள்ள கடல் மாசு காரணமாக 150 இற்கும் மேற்பட்ட கடல் உயிரினங்கள் உயிரிழந்த நிலையில் கரை ஒதுங்கியுள்ளன.

நேற்று வரை 100 ஆமைகள், 15 டொல்பின்கள், 3 திமிங் கலங்கள் மற்றும் ஏராளமான கடல் பறவைகள் மற்றும் மீன் இனங்களின் உடல்கள் இவ்வாறு கரை ஒதுங்கியுள்ளன.

இறந்த கடல் விலங்குகள் குறிப்பாக மேற்கு கடற்கரைப் பகுதிகளில் அதிகமாகக் கரை ஒதுங்குகின்றன.

கடந்த சனிக்கிழமையன்று, மன்னார் முசலி கரடிக்குளி கடற்கரையில் தீக்காயங்களுடன் இறந்த திமிங்கலம் கரைக்கு வந்தது. இது சுமார் 12 அடி நீளம் கொண்டது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனிடையே, வனவிலங்கு பாதுகாப்பு துறை உயிரினங் களின் இறப்புகளின் எண்ணிக்கையைக் குறைக்க முயற்சித்து வருவதாக சுற்றுச் சூழல் ஆர்வலர் ஹேமந்த விதானகே தெரிவித்துள்ளார்.



இலங்கை பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி வட் டம், சுப்புன் லஹிரு பிரகாஷ், கடல் வாழ் உயிரினங்களின் இறப்பு குறித்த வன விலங்குகள் அதிகார சபையின் விசாரணை கள் தொடர்பில் கவனம் செலுத்தும்படி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கடிதம் மூலம் கேட்டுக்கொண்டுள்ளார். (இ)

# எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு அழைப்பு விடுத்தது 'கோப்' குழு

கொழும்பு, ஜூன் 24

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட சில நிறுவனங்களை அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு) முன்னிலையில் அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அக்குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கோப் குழு உறுப்பினர்களின் விசேட கூட்டத்திலேயே இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

கொரோனாத் தொற்று நோய் சூழலில் திட்டமிட்டபடி கூட்டங்களை நடத்தமுடியாமல் உள்ளமை மற்றும் எதிர் வரும் காலத்தில் கூட்டங்களை நடத்திச் செல்லும் முறை தொடர்பில் தீர்மானிப்பதற்காக இந்தக் கூட்டம் கூட்டப்பட்டிருந்தது.

இதற்கமைய எதிர்வரும் ஜூலை 06ஆம் திகதி ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தையும், ஜூலை 07ஆம் திகதி இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் தொடர்புபட்ட நிறுவனங்களையும் கோப் குழு முன்னிலையில் அழைப்பதற்கும் இக்குழுவின் உறுப்பினர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

இதன்போது, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கீழ் உள்ள லிட்ரோ காஸ் லங்கா நிறுவனம் மற்றும் லிட்ரோ காஸ் டேர்மினல் லங்கா நிறுவனம் ஆகியவற்றின் தற்போதைய நிலைமைகள் குறித்து விசாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக ஜூலை 08ஆம் திகதி முதல் கடந்த காலத்தில் அழைக்க முடியாமல் போன நிறுவனங்களை மீண்டும் அழைப்பதற்கு கோப் குழுவின் உறுப்பினர்கள் இதன்போது இணக்கம் தெரிவித்தனர்.

பாராளுமன்றத்தில் விவாதிப்பதற்காக பிரேரிக்கப் பட்டுள்ள மஹாபொல அறக்கட்டளை நிதியத்தின் கீழ் இயங்கும் மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் அறக்கட்டளை நிதியம் தொடர்பிலும் கோப் குழு கவனம் செலுத்தியது.

இதற்கு மேலதிகமாக தற்போது நிலவும் கொரோனாத் தொற்றுநோய் சூழலுக்கு மத்தியில் சுகாதாரப் பாதுகாப்பு ஒழுங்கு விதிகளுக்கு அமைய கோப் குழுவின் அமர்வுகளை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது என்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இதற்கமைய எதிர்காலத்தில் கோப் குழுவின் விசாரணைகளுக்கு அரச நிறுவனங்களை அழைக்கும்போது அந்நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் கணக்காளர் ஆகியோருடன் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரை மாத்திரம் குழுவின் முன்னிலையில் அழைப்பது மற்றும் ஏனையவர்களை ஒன்லைன் முறைமையின் கீழ் இணைத்துக் கொள்வது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்படவுள்ளது. (இ)

# மரண அறிவித்தல்



## திருமதி கனகசூரியர் நாகேஸ்வரி

யாழ்ப்பாணம், ஈச்சமோட்டை சுவாமியார் வீதியைப் பிறப்பிடமாகவும், திருகோணமலை உவர்மலையை வதிவிடமாகவும் கொண்ட கனகசூரியர் நாகேஸ்வரி கடந்த 21.06.2021 திங்கட்கிழமை திருகோணமலையில் காலமானார் .

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம் – அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அருணாச்சலம் – யோகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகசூரியரின் அன்பு மனைவியும், ரவீந்திரன் (பிரான்ஸ்) ரஞ்சினி, ராகினி, குலேந்திரன் (ஜேர்மன்) புவீந்திரன் (ஜேர்மன்) ரஜனி ஆகியோரின் பாசமிகு தாயரும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, பாலசிங்கம், புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பாலேந்திரன், மகேஸ்வரி (மஞ்சு), சண்முகலிங்கம், பிரேமகாந்தி, நந்தினி, மோகனராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலம்சென்ற திருநாவுக்கரசு, அன்னபூரணம், தவராஜசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

42, ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

தகவல்
**வேலாயுதம் பாலசிங்கம்**
(சகோதரன்)

## மத்திய...

இலங்கை அரசும் சுகாதாரத்துறையும் பணியாற்றுமெனவும் கூறினார்.

எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதஸாவினால்ஏற்கனவே கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை பதிலளித்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறிய சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மேலும் கூறுகையில்,

பி.சி.ஆர். பரிசோதனைகளின் ஊடாக கண்டறியப்படும் அனைத்து தொற்றாளர்களின் தரவுகளையும் அரசாங்கம் அறிக்கைப்படுத்தி வருகிறது. கொரோனா தொற்றாளர்களை விரைவாக இனங்காணும் வகையில் உரிய வேலைத்திட்டமொன்றையும் அரசாங்கம் கடைப்பிடித்து வருகிறது. விசேட மருத்துவ நிபுணர்கள் மற்றும் ஏனைய நிபுணர்களின் ஆலோசனைகளின் பிரகாரம்தான் நாம் தீர்மானங்களை எடுத்து செயல்பட்டு வருகிறோம்.

கண்டறியப்படும் கொரோனா தொற்றாளர்களை தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களுக்கு அனுப்பல், அவர்களுக்கான சிகிச்சையை வழங்கல், கண்டறியப்படும் தொற்றாளர்களுடன் தொடர்பை பேணியவர்களை உரிய வகையில் கையாளல், வெளிநாட்டில் இருந்துவரும் கொரோனா தொற்றாளர்களை கையாளல் என இந்த செயல்பாடு ஒரு பொறிமுறையின் கீழ் முன்னெடுக்கப்படுகிறது.

கடந்த 20ஆம் திகதிவரையான காலப்பகுதியில் 217,000 அதிகமான கொரோனா தொற்றாளர்கள் கண்டறிப்பட்டுள்ளதுடன், 3,894,775 பி.சி.ஆர். பரிசோதனைகளும் செய்யப்பட்டுள்ளன. கடந்த மாதம் மாத்திரம் 712,515 பி.சி.ஆர். பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன. இம்மாதத்தில் கடந்த 20ஆம் திகதிவரை 382,018 பி.சி.ஆர். பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன.

நாட்டில் அதிகரிக்கும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பி.சி.ஆர்.பரிசோதனைகளின் எண்ணிக்கையையும் அதிகரித்து வருகிறோம். இரசாயன பரிசோதனைகளை விரிவுபடுத்தவும் சுகாதார அமைச்சு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. கடந்த ஆண்டு மார்ச் மாதம் கொரோனா தொற்று முதலில் கண்டறியப்பட்டிருந்த தருணத்தில் 3 பி.சி.ஆர். இயந்திரங்கள் மாத்திரமே எம்மிடம் இருந்தன. அவற்றில் 300 பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள முடிந்தது. ஆனால், தற்போது 30 இற்கும் அதிகமான இரசாயன பகுப்பாய்வகங்கள் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்காக உருவாக்கப்பட்டுள்ளன. அரச வைத்தியசாலைகள் அனைத்திலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொது மக்களுக்கு தொற்று தொடர்பில் உண்மையான அனைத்து தகவல்களும் வழங்கப்படுகின்றன. ஏற்படும் மரணங்களின் தரவுகளும் தினமும் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

கொரோனா தொற்று ஓர் உலகளாவிய பெருந்தொற்றாகும். கொரோனா தொற்று தற்போது பல்வேறு திரிபுகளாக விரிவடைந்துள்ளது. புதிதாக கண்டறியப்படும் திரிபுகள் ஏனைய நாடுகளில் பரவாதிருக்க நாடுகளுக்கிடையிலான ஒருங்கிணைந்த செயற்பாடுகள் அவசியமாகவுள்ளன . பிரித்தானியாவில் கண்டறியப்பட்ட புதிய திரிபானது தற்போது நூற்றுக்கும் அதிகமான நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளது. மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து வருகை தந்துள்ளவர்கள் மூலமே பிரித்தானியாவின் திரிபு இலங்கையில் பரவியுள்ளமைக்கான சாதகத் தன்மைகள் உள்ளன. நாம் புதிய சுகாதார வழிகாட்டல்களை இதற்காக உருவாக்கியுள்ளோம்" என்றார்.

## அமைச்சர்...

களின் பெற்றோர், உறவினர்கள் சார்பில் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், "எமது உறவுகள் குற்றத் தண்டனைக்கும் அதிகமான காலத்தை சிறையில் கழித்த பின்பும் அவர்களை தொடர்ந்து தடுத்து வைத்திருப்பது முறையல்ல என்பதையும் தெரிந்தோ தெரியாமலோ சந்தர்ப்ப சூழ்நிலைகளால் செய்திருக்கக் கூடிய செயல்பாடுகளுக்காக அவர்களது பாதி வாழ்க்கை வீணடிக்கப்பட்டு விட்டது என்பதையும் ஏற்றுக் கொண்டு தமிழ் அரசியல் கைதிகளை புனர்வாழ்வுக்கு உட்படுத்தியேனும் நியாயத்தை பெற்றுக்கொடுக்க வேண்டும் என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

வரலாற்றில் முதற்தடவையாக ஆளும் அரசாங்கத்தின் பொறுப்புமிகு அமைச்சர் ஒருவர் இவ்வாறு கூறியிருப்பது எமது உறவுகளின் துரித விடுதலைக்கான நல்லெண்ண சமிக்ஞை என்றே நம்புகிறோம். அது மட்டுமன்றி ஆளும் கட்சியை சேர்ந்த உறுப்பினர்களும் எதிர்த் தரப்பு உறுப்பினர்களும் அமைச்சர் நாமல் ராஜ பக்ஷவின் வேண்டுகோளையும் அதற்கு சாதகமாக பதிலளித்த நீதி அமைச்சரின் கருத்தையும் முழுமனதோடு ஏற்றுக்கொண்டு கைதிகளின் விடுதலை விவகாரத்தை ஆதரித்திருந்தமை முக்கியமான விடயம்.

நிச்சயமாக நீண்ட நெடுங்காலம் சிறையில் வாடும் எமது பிள்ளைகளின் உண்மை நிலையினை சகோதர சமூகத்தின் மக்கள் பிரதிநிதிகள் உணர்ந்திருக்கின்றமையானது எமது உறவுகளின் விடுதலைக்கு தீர்வினை தருகின்ற முதற் புள்ளி என்றே கருதுகின்றோம். இது எமக்கு நம்பிக்கையைத் தருகின்றது" என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## யாழில் 34 பேர்...

தனை முடிவுகளிலேயே இவர்கள் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். யாழ் பல்கலைக்கழகத்தில்337 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளின்படி, 16 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இதன்படி, சண்டிலிப்பாயில்12 பேரும், யாழ்ப்பாணம் மாநகரில் 4 பேரும் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் ஆய்வுகூடத்தில் பரிசோதிக்கப்பட்ட 590 பேரின் பி.சி.ஆர். முடிவுகளின்படி 27 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதன் அடிப்படையில், சங்கானையில் 14 பேரும், யாழ்.போதனா வைத்திய சாலையில் 3 பேரும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒருவருமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 18 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

மாந்தை மேற்கில் இருவர், நானாட்டானில் மூவர், மன்னார் பொது மருத்துவமனையில் இருவர் என மன்னார் மாவட்டத்தில் 7 பேர் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர். இதேபோன்று, கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருவரும், வவுனியா மாவட்டத்தில் ஒருவரும் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர். (ஐ)

## விரைவில்...

அறிவிப்பதாகவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அறிவித்துள்ளார்.

இதேவேளை, வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அது தொடர்பில் விடயங்கள் இடம்பெறும்போது, தமது கட்சி அது குறித்து முடிவெடுக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பின் தீர்மானம் எடுப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் நேற்று பாராளுமன்றத்துக்கு வருகை தராமையால், உத்தியோகபூர்வமாக பாராளுமன்றக் குழுக் கூட்டத்தை நடத்த முடியாமல் போனதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் மேலும் தெரிவித்தார். (இ)

# மூடப்பட்டுள்ள பாடசாலைகளை திறக்கவே முடியாத நிலைமை

### தொற்றின் வேகம் குறையவில்லை; சபையில் கல்வி அமைச்சர் தகவல்

கொழும்பு, ஜுன் 24

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகளை உடனடியாக திறக்க முடியாத நிலைமையே காணப்படுகின்றது என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டில் கொரோனாத் தொற்றின் வேகம் இன்னமும் குறையவில்லை. தற்போதைய நிலைமையில் அவசரப்பட்டு பாடசாலைகளைத் திறப்பது மாணவர்களுக்கு சுகாதார ரீதியிலான பாதிப்புகளை ஏற்படுத்தலாம்.

எவ்வாறாயினும் விசேட நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்று பாடசாலைகளைத் திறக்கும் நாட்கள் தொடர்பாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமையால் மாணவர்களுக்கு இணைய வழியில் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தேவையான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்" - என்றார். (இ)

## குருநகரில்...

வாறு முடக்கப்பட்டன. இந்தப் பகுதிகளில், கடந்த ஒரு வாரத்தில் 125 இற்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் அடையாளம் காணப் பட்டனர். இதையடுத்தே இரு கிராம சேவகர் பிரிவுகளையும் முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ஐ)

## 2,178 பேருக்கு...

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 46 ஆயிரத்து 91 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன்,கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,890 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 11 ஆயிரத்து 186 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 32 ஆயிரத்து 136 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## வழக்கு தொடராது...

தயாசிறி ஜய சேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் கீழான தீர்மானம், ஏற்றுமதி இறக்குமதி கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள், அரசாங்கத்தின் அத்தியாவசிய செலவீனங்கள் மற்றும் கொரோனா தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள குறைநிரப்பு மதிப்பீடு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ இருந்த காலத்தில் 12 ஆயிரம் போராளிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். அதேபோல முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக் காலத்தில் அதிகளவான தமிழ் சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோல் தற்போதும் சிறைச்சாலைகளில் உள்ள தமிழ் சிறைக் கைதிகளை விடுதலை செய்யப்பட வேண்டும். ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைப் பெற்றுக்கொள்வதற்காக நாம் இதனை கூறவில்லை. இவர்களில் பலர் வழக்குத் தாக்கல் செய்யப்படாது, தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இது மனித உரிமை மீறலாகும். வழக்குகளை தொடராது தமிழ் இளைஞர்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பது, மனித உரிமை மீறல் என்றார்.

## கொரோனா...

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 40 ஆண்களும், 25 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 769ஆக அதிகரித்துள்ளது. (இ)

## 17 தமிழ்...

விடுதலை செய்யக்கூடிய 17 சந்தேக நபர்களின் பெயர்ப் பட்டியல் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார். பொசன் பூரணையை முன்னிட்டு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் அடிப்படையில் இவர்களை விடுதலை செய்ய முடியும் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், ஜனாதிபதியின் தீர்மானம் இதுவரை தமக்குக் கிடைக்கவில்லை எனவும் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே மேலும் குறிப்பிட்டார். இதேவேளை, ஜனாதிபதியின் தீர்மானம் இன்று தமக்குக் கிடைக்கும் எனச் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்தார். (இ)

## கிளிநொச்சி...

பயணித்த செல்வாநகரை சேர்ந்த அருளானந்தம் மைக்கல் (வயது 48) என்பவே இவ்வாறு உயிரிழந்தார்.

செல்வா நகர் பகுதியிலிருந்து கிளிநொச்சி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவரை விதிகளை மீறி எதிரே வந்த கப் ரக வாகனம் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன்போது, மோட்டார் சைக்களில் பயணித்தவர் காயமடைந்து உயிருக்கு போராடியபோது, கப் வாகன சாரதி வாகனத்தை கைவிட்டு தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்துக் குறித்து மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ரிஷாத்தின்...

நவாஸ், தனது தனிப்பட்ட காரணங்களுக்காக வழக்கு விசாரணையில் இருந்து விலகிக்கொள்வதாக அறிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் அடிப்படை உரிமை மீறல் வழக்கு நேற்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்ட போதே, நீதியரசர் நவாஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கை விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட நீதியரசர் குழாமில் இருவர் ஏற்கனவே விலகிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து குறித்த அடிப்படை உரிமை மீறல் வழக்கு விசாரணை எதிர்வரும் ஜூலை மாதம் 5 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (இ)

ஈழநாடு
Eelanadu

# நிதியை காட்டி அதிகாரங்களை பறிக்க முடியாது; பணயம் வைக்க முயல்கின்றார் சுகாதார அமைச்சர்!

## ரெலோவின் பேச்சாளர் சுரேந்திரன் அறிக்கை



யாழ்ப்பாணம், ஜுன் 24

**“மாகாண சபை வைத்தியசாலைகளை மத்திய அரசு கையகப் படுத்தினால் மாத்திரமே நிதி வழங்குவோம் என்ற மிரட்டல் மூலம் மாகாண சபை அதிகாரங்களைப் பணயம் வைக்க சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி முயல்கின்றார்.”**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது: -

“பாராளுமன்ற உரையிலே மாகாண சபை வைத்தியசாலை களைக் கையகப்படுத்த மாட்டோம் ஆனால், நிதியும் ஒதுக்கமாட்டோம் என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்திருப்பதை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அவர் மாகாண சபை வைத்திய சாலைகளை மத்திய அரசு கையகப் படுத்தினால் மாத்திரமே நிதி வழங்கு வோம் என்ற மிரட்டல் மூலம் மாகாண சபை அதிகாரங்களைப் பணயம் வைக்க முயல்கின்றார். இது ஒரு அரசியல் குற்றம் என்பதை அவர் உணரத் தவறி இருக்கின்றார்.

அமைச்சரின் கூற்று தற்போது அரசின் சர்வாதிகாரப் போக்கை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டு கின்றது.

அரசியல் சாசனத்தின் ஊடாக வும் மாகாண சபை சட்டத்தின் மூலமாகவும் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் மாகாண சபையின் அதிகார வரம் புக்கு உட்பட்ட வைத்தியசாலை கள், மத்திய அரசால் கையகப் படுத்துவது அரசியல் யாப்பை மீறும் செயலாகும். மாகாண சபையின் ஒப்புதலுடன்தான் இதை நடைமுறைப்படுத்த முடியும்.

மாறாக மாகாண சபைகள் இயங்கு நிலையில் இல்லாத சூழலில் கையகப்படுத்துவது தவ றானதாகும். மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மக் களின் உரிமை என்பதையும், மத் திய அரசின் திறை சேரி நிதியும் மக் கள் வரிப்பணத்தில் பெறப்பட்டதால் மக்களுக்கே உரித்தானது என்பதை யும் அமைச்சர் மறந்துவிட்டார். நிதி ஒதுக்கீடு என்பதும் மக்கள் நலன் சார்ந்த திட்டங்களின் அடிப் படையில்தான் என்பதையும் மாகாண சபைக்குரிய வைத்தியசாலைகளால் பயனடைவது திறை சேரிக்கு வரி செலுத்தும் மக்களே என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

ஆகவே, நிதி ஒதுக்கீடு என்பது பயனாளிகளின் நலன் கருதி இருக்க வேண்டுமே தவிர அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவதற்கு மிரட்டுகின்ற அல்லது பணயம் வைக்க கையாளு வது அரசியல் குற்றம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

மாகாண சபையின் அதிகாரத் துக்குள் வைத்தியசாலைகள் இயங் கும்போது கூட மத்திய அரசால் நிதி ஒதுக்கி அவற்றின் தரத்தை உயர்த்த முடியும். அப்படி பல வைத்தியசாலைகள் சிறந்த முறை யில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அபிவிருத்தி அடைந்த நிலையில் பல மாகாணங்களில் காணப்படு வதையும் அமைச்சர் கருத்தில் கொள்ள வேண்டும்.

அண்மையில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற் றப்பட்ட 46/1இல் குறிப்பிடப் பட்ட சரத்துக்களின் பிரகாரம் அரசமைப்பின் 13ஆவது திருத் தத்தின் அடிப்படையில் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டு அவைகளின் நிர்வாகம் சிறந்த முறையில் இயங்குவதை இலங்கை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை மீறும் செய லாக இதை நோக்குகின்றோம்.

மாகாண சபைகளின் நிர்வாகத் தைக் குழப்பும் முகமாக அல்லது மிரட்டு முகமாக அமைச்சர் தெரி வித்த கூற்றை மக்களின் அடிப்படை மனித உரிமை மீறலாகக் கருதி ஐ.நா. மனித உரிமைச் சபையில் ஆவணப் படுத்தும் நடவடிக்கையை முன்னெ டுப்போம்” - என்றுள்ளது. (இ - 03)

# யாழில் 8 ஆயிரம் பேர் தனிமைப்படுத்தலில்

## இரண்டு கிராமங்கள் முடக்கம் என்கிறார் மாவட்ட அரச அதிபர்



யாழ்ப்பாணம், ஜுன் 24

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 721 குடும் பங்கள் சுயதனிமைப்படுத்தலில் உள்ளனர் என்று மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

“யாழ். மாவட்டத்தில் இதுவரை 72 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தனர். 4 ஆயிரத்து 919 பேர் தொற்றுக்குள்ளாகி உள்ளனர். அதில் 3 ஆயிரத்து 696 பேர் சிகிச்சை பெற்று நலமாகி வீடு திரும்பியுள்ளனர்.

தற்போது உடுவில் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இரண்டு கிராமங்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளன.

அத்தோடு மாவட்டத்தில் தற்போது 2 ஆயிரத்து 721 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 71 நபர்கள் சுயதனி மைப்படுத்தப்பட்டுள்ளர்.

நாட்டில் வருமானம் குறைந்த குடும்பங்களுக்குத் தற் போது வழங்கட்டு வரும் 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு யாழ். மாவட்டத்தில் இதுவரை 71 ஆயிரத்து 721 குடும் பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது” - என்றார். (இ - 03)

# இலங்கை துறைமுக அதிகார சபையின் புதிய தலைவராக நிஹால் பதவியேற்பு



கொழும்பு, ஜுன் 24

இலங்கை துறைமுக அதி கார சபையின் புதிய தலைவ ராக நிஹால் கெப்பெடிபொல பதவியேற்றுக்கொண்டார்.

ஜனாதிபதியின் பணிப்புரை யின் பேரில் துறைமுக அதிகார சபையின் 27 ஆவது தலைவ ராக நிஹால் கெப்பெடிபொல நியமிக்கப்பட்டார்.

வணிக ரீதியான கப்பல் துறை நிபுணரான அவர், 2015 ஆம் ஆண்டு வரை துறைமுக அதிகார சபையின் முகாமைத்துவ பணிப் பாளராகவும் செயற்பட்டார்.

ஒய்வுபெற்ற ஜெனரல் தயா ரத்னா யக்கவின் இடமாற்றத்தைத் தொடர்ந்து, அவ்விடத்துக்கு புதிய தலைவராக நிஹால் கெப்பெடிபொல நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.06.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் : உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு



7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை




1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-பாண்டியநாடு-பிரம்மன் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை - திரை விமர்சனம்- ஜெகமே தந்திரம்



**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : வெள்ளிடை நுட்பம்- சோலர் மின்கலத்தில் ஓடும் மோட்டார்கார்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு- இசைக்குழுக்களுக்கான போட்டி நிகழ்ச்சி (மறுஒளிபரப்பு)
10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**
1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்

## ஓம் டிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
7.00 மணி : பிறை பிரசங்கம்

**இரவு**
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்